# முதலாம் பகுதி

# நிறுத்தலளவையும் முகத்தலளவையும்

## மாற்றற் காரணிகள்

### பிரித்தானிய முறையிலிருந்து மெற்றிக் அலகுகட்கு

| | | |
|---|---|---|
| 1 ஏக்கர் | = | 0.405 எக்டேயர்கள் (எ. டே.) |
| 1 இருத்தல் (இரு) | = | 0.454 கிலோ கிரும்கள் (கி. கி.) |
| 1 லோங் தொன் (2,240 இரு) | = | 1.016 மெற்றிக் தொன்கள் (மெ. தொ.) |
| 1 அந்தர் (112 இரு) | = | 50.802 கி. கி. |
| 1 மைல் | = | 1.609 கிலோ மீற்றர்கள் (கி. மீற்.) |
| 1 லோங் தொன் மைல் | = | 1.635 மெ. தொன் கி. மீ. |
| 1 இரு / ஏக்கரிற்கு | = | 1.121 கி. கி. / எ. டே. |
| 1 அந்தர் / ஏக்கரிற்கு | = | 125.536 கி. கி. / எ. டே. |
| 1 பைந்து | = | 0.75 லிற்றர்கள் |
| 1 இம்பீரியல் கலன் | = | 4.55 லிற்றர்கள் |

### மெற்றிக் முறையிலிருந்து பிரித்தானிய அலகுகட்கு

| | | |
|---|---|---|
| 1 எக்டேயர் | = | 2.471 ஏக்கர்கள் |
| 1 கிலோகிரும் | = | 2.205 இருத்தல்கள் |
| 1 மெற்றிக்தொன் (1,000 கி.கி.) | = | 0.984 லோங் தொன் |
| 1 மீற்றர் | = | 3.281 அடி |
| 1 கிலோமீற்றர் | = | 0.621 மைல் |
| 1 மெற்றிக் தொன் கிலோமீற்றர் | = | 0.612 லோங் தொன் மைல் |
| 1 லிற்றர் | = | 1.76 பைந்துகள் = 0.219 இம்பீரியல் கலன்கள் |
| 1 கி.கி. / எக்டேயரிற்கு | = | 0.892 இரு/ ஏக்கரிற்கு |

### நெல் / அரிசி மாற்றி அமைத்தல்

| | | |
|---|---|---|
| 1 புசல் (நெல்) (46 இரு.) | = | 20.87 கி. கி. |
| 1 மெற்றிக் தொன் நெல் | = | 47.92 புசல்கள் நெல் |
| | = | 0.7 மெ. தொன் அரிசி |
| 1 மெற்றிக் தொன் அரிசி | = | 68.46 புசல்கள் நெல் |
| | = | 1.43 மெ. தொன் நெல் |
| 1 புசல் நெல் / ஏக்கர் | = | 51.55 கி. கி. நெல் / எ. டே. |

# 1983இல் பொருளாதாரச் செயலாற்றமும் பிரச்சினைகளும் கொள்கைகளும்

## அறிமுகம்

1983இல் இலங்கையின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.9* சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1982இல் பதிவு செய்யப்பட்ட 5.1 சதவீதங்கொண்ட உண்மையான வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடத்தக்கதாகும். தேறிய காரணி வருவாய் கணக்கிலெடுக்கப் படின் நிலையான (1982) காரணிச்செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 1983இல் 4.1 சதவீத வளர்ச்சி வீதத்தை மட்டுமே காட்டியது. ஒருபுறம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்திற்கும் மறுபுறம் மொத்தத் தேசிய உற்பத்திக்குமிடையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடு, காரணி வருவாயின் தேறிய வெளிப்பாய்ச்சலின் அளவினது கவனத்தை மீண்டுமொரு முறை ஈர்க்கிறது. மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் இதேபோல் பாதிக்கப்பட்ட முன்னைய நிகழ்வு 1981இல் காணப்பட்டபோதும் அவ்வாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உண்மையான வளர்ச்சி 1983இனதைவிட கிட்டத்தட்ட ஒரு சதவீதப்புள்ளியால் அதிகமாயிருந்தது. வெளிநாட்டுத் தனியார் மூலதனத்தின் மீதான ஒன்றுசேர்ந்த பங்கிலாபங்கள், இலாபங்கள் ஆகியவற்றின் மீள அனுப்பல்களைவிட வெளிநாட்டு மூலதனக் கடன்கள் மீதான வட்டிக்கொடுப் பனவுகளைப் பொறுத்தவரையிலேயே வெளிநாட்டுக்கான தேறிய காரணி வருவாய்களின் வெளிப்பாய்ச்சலிலேற்பட்ட அதிகரிப்பு அதிகமாயிருந்தது.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 1,090,090 இலட்சமாகவும், நிலையான (1982) காரணிச்செலவு விலைகளில் ரூ. 940,370 இலட்சமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளன. 1983இல் மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கியில் ஏற்பட்ட உள்ளடக்க மாற்றம் 16 சதவீதமாக மதிப்பிடப் பட்டுள்ளது. 1982இல் பதிவுசெய்யப்பட்ட விலைகளில் ஏற்பட்ட 10.2 சதவீத மான சராசரி மாற்றத்தைவிட இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும், பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி இலங்கையின் குடித் தொகை 1.5 சதவீதத்தால் அதிகரித்தது. குடித்தொகையில் இவ்வதிகரிப்பு ஏற் பட்டமைக்கு இடமளிக்குமிடத்து தலைக்குரிய உண்மை வருமானம் 1982இன் 3.3 சதவீத அதிகரிப்புக்கெதிராக 2.5 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வீழ்ச்சி 1983 காலப் பகுதியின் தேறிய காரணி வருமானத்தின் வெளிப்பாய்ச்சலின் அதிகரிப்பினால் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. நடைமுறை விலைகளில் தலைக் குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 7,071 ஆக அல்லது 301 ஐ, அ. டொலர் களாக விளங்கியது.

---

* வளர்ச்சி வீதம் 1982இனை அடிப்படையாண்டாகக் கொண்ட தேசிய கணக்குகளின் புதிய தொடரினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது. 1982இனை அடிப்படையாகக் கொண்டமைக்கு இரண்டு முக்கிய கருதுகோள்களின் செல்வாக்குக் காரணமாயிருந்தது. ஒன்று, பொருளாதார நிதிக் கொள்கைகளில் 1977இல் பின்பற்றப்பட்ட பெரிய மாற்றங்களின் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட அமைப்பு ரீதியான மாற்றங்கள் 1982இல் நிலைபெற்றுக் காணப்பட்டன. இரண்டாவது, 1982ஆம் ஆண்டளவில் சில உற்பத்தி மதிப்பீடுகள் தொடர்பான அண்மைக்காலம் வரையிலான உயர் தரமிக்க மூலத்தரவுகள் கிடைக்கப்பெற்றமை எடுத்துக் காட்டாக, நுகர்வோர் நிதி, சமூகப்பொருளா தார நிலைமைகள் 1981/82 பற்றிய மத்திய வங்கி அளவீட்டின் பெறுபேறுகள் ஆகியன.

## அட்டவணை 1.1

### தேசிய வருமான புள்ளிவிபரங்கள் 1980 — 1983

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | | வளர்ச்சி வீதம் % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1980(அ) | 1981(அ) | 1982(அ) | 1983(அ) | 1980 | 1981 | 1982 | 1983 |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 62,246 | 79,337 | 91,643 | 111,335 | 25.0 | 27.5 | 15.5 | 21.5 |
| 2. நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 19,575 | 20,706 | 21,756 | 22,824 | 5.8 | 5.8 | 5.1 | 4.9 |
| 3. நடைமுறைக் காரணிச செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 61,814 | 77,469 | 89,609 | 108,171 | 24.8 | 25.3 | 15.7 | 20.7 |
| 4. நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில் மொ தே. உ. ... | 19,456 | 20,216 | 21,229 | 22,07[illegible] | 5.6 | 3.9 | 5.0 | 4.0 |
| 5. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. (புதிய தொடர்கள்) ... | | | 92,398 | 112,17[illegible] | | | | 21.4 |
| 6. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. (புதிய தொடர்கள்) ... | | | 92,398 | 96,92[illegible] | | | | 4.9 |
| 7. நடைமுறைக் காரணி செலவு விலைகளில் மொ. தே. உ. (புதிய தொடர்கள்) ... | | | 90,364 | 109,009 | | | | 20.6 |
| 8. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. (புதிய தொடர்கள) ... | | | 90,364 | 94,037 | | | | 4.1 |
| 9. நடுவாண்டுக் குடித்தொகை ('000) ... | 14,685 | 14,935 | 15,189 | 15,416 | 1.7 | 1.7 | 1.7 | 1.5 |
| 10. தலைக்குரிய மொ. தே. உ (பழைய தொடர்கள்) ... | | | | | | | | |
| i. நடைமுறை விலைகளில் ... | 4,194 | 5,187 | 5,900 | 7,017 | 22.5 | 23.7 | 13.7 | 18.9 |
| ii. நிலையான (1970) விலைகளில் ... | 1,320 | 1,353 | 1,398 | 1,432 | 3.6 | 2.5 | 3.3 | 2.4 |
| 11. தலைக்குரிய மொ. தே. உ (புதிய தொடர்கள்) ... | | | | | | | | |
| i. நடைமுறை விலைகளில் ... | | | 5,949 | 7,071 | | | | 18.9 |
| ii. நிலையான (1982) விலைகளில் ... | | | 5,949 | 6,100 | | | | 2.5 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

*1983*இல் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான உள்ளடக் கத்தின் ஆய்வு *4.9* சதவீதங்கொண்ட உண்மையான வளர்ச்சி வீதம், காட்டுத் தொழில், கடற்றொழில் இரண்டையும் உள்ளடக்கும் வேளாண்மைத்துறையினது கூட்டப்பட்ட பெறுமதியில் காணப்பட்ட அதிகரிப்பினுல் முக்கியமாக வலுவாக் கப்பட்டதென்பதைக் காட்டுகிறது. இத்துறையில் *1983*இல் காணப்பட்ட *5.1* சதவீதமான வளர்ச்சிவீதம், முன்னைய ஆண்டுக்காகப் பதிவுசெய்யப்பட்டதி லிருந்து இரண்டு மடங்கு அதிகமானதாகும். முழுமையாகப் பார்க்கையில், கடந்த ஐந்து ஆண்டுகளாக மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை விஞ்சிய பணிகள் துறையின் வளர்ச்சி வீதங்கள், மீண்டுமொருமுறை *6.6* சதவீதமான உயர்வளர்ச்சி வீதங்களைப் பேணிக்கொண்டன. எனினும், ஏனைய இரு முதன் மைத் துறைகளான தயாரிப்புத்துறையும், கட்டடவாக்கத் துறையும் மிகவும் குறைந்த செயலாற்றத்தைக் கொண்டிருந்தன. தயாரிப்புத்துறை *1* சதவீதத் திற்குக் குறைவாகவும், கட்டடவாக்கத்துறை *1* சதவீதத்தாலும் வளர்ச்சிய டைந்தன.

அட்டவணை 1.2

**மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் 1982 — 1983**
**நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்**

| துறை | தொகை(ப.இ.ரூபாய்களில்) 1982(அ) | 1983(அ) | வளர்ச்சி வீதம் 1983(அ) |
|---|---|---|---|
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் இதில் : ... | 24,964 | 26,237 | 5.1 |
| 1.1 தேயிலை ... | 2,418 | 2,309 | -4.5 |
| 1.2 இறப்பர் ... | 770 | 833 | 8.2 |
| 1.3 தெங்கு ... | 3,263 | 2,995 | -8.2 |
| 1.4 நெல் ... | 5,484 | 6,290 | 14.7 |
| 1.5 ஏனையவை [சிறு உணவுப்பயிர்கள், காட்டுத் தொழிலும் கடற்றொழிலும் உட்பட] ... | 13,029 | 13,810 | 6.0 |
| 2. சுரங்கத் தொழிலும், அகழ்வுத் தொழிலும் ... | 2,238 | 2,413 | 7.8 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 13,601 | 13,710 | 0.8 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... | 2,846 | 2,715 | -4.6 |
| 3.2 ஏனையவை .. | 10,755 | 10,995 | 2.2 |
| 4. கட்டடவாக்கம் ... | 7,959 | 8,039 | 1.0 |
| 5. பணிகள் ... | 43,636 | 46,527 | 6.6 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 92,398 | 96,926 | 4,9 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... | -2,034 | -2,889 | — |
| 8. மொத்த தேசிய உற்பத்தி ... | 90,364 | 94,037 | 4.1 |

அ) தற்காலிகம் மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பல்வேறு துறைகளுக்குள், துணைத்துறைகளின் செயலாற்றத்தில் பரந்த வேறு பாடுகள் காணப்பட்டன. நெல் பயிரிடலின் கூட்டப்பட்ட பெறுமதியிலேற்பட்ட *14.7* சதவீத அதிகரிப்பு, எந்தவொரு தனியாண்டிலும் பதிவுசெய்யப்பட்டதை

விட உயர்ந்ததாகும். இறப்பர் 8.2 சதவீத வளர்ச்சியைக் காட்டியவேளையில், பாதகமான காலநிலை நிலைமைகளினால் தேயிலையினதும், தெங்கினதும் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சி, வளர்ச்சி வீதத்தில் மிகவும் சாதகமற்ற தாக்கத்தைக் கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்திற்கு மேலாக துணை உணவுப்பயிர்களின் வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளில் பேணப் பட்டுவந்தது. தயாரிப்புத்துறையைப் பொறுத்தவரையில் 1983இல் காணப்பட்ட ஒரு சதவீதமான குறைந்த வளர்ச்சி வீதத்திற்கு தேயிலை, தெங்கு ஆகியவற்றின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சி காரணமாகும். எனினும், தொழிற்சாலைக் கைத் தொழிலும், சிறு கைத்தொழிலும் முன்னைய ஆண்டின் 9 சதவீத வளர்ச்சிக் கெதிராக 2.2 சதவீத வளர்ச்சியைக் காட்டின.

முன்னைய இரு ஆண்டுகளினதும் எதிர்க்கணிய வளர்ச்சி வீதங்களுக்கு மாறாக, கட்டடவாக்கத்துறை, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கூட்டப்பட்ட பெறுமதிக்கு அளித்த பங்கு 1982ஐவிட 1 சதவீதத்தால் அதிகரித்தது. இது விரைவுபடுத்தப்பட்ட மகாவலித் திட்டத்தின் செலவின் உயர்மட்டத்தினது முக்கிய விளைவாகும். மாதுறுஓயா செயற்திட்டத்தின் முக்கிய வேலைகள் முடிவடைந்தமையும், 1984இன் முற்பகுதியில் முடிவடையச் செய்யும் நோக்குடன் விக்டோரியா அணை விரைவில் கட்டப்பட்டமையும் ரந்தெனிகல செயற்றிட்டத் தின் வேலை ஆரம்பிக்கப்பட்டமையும் கட்டடவாக்க நடவடிக்கைக்கு முக்கிய மானதொரு தூண்டுதலையளித்தது. எனினும், தனியார்துறை வீடமைப்பு நடவடிக்கை தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக* வீழ்ச்சியடைந்தது. பணிகள் துறையில் மொத்த விற்பனை, சில்லறை விற்பனை வர்த்தகத்திலும் போக்குவரத் திலும் உயர் நடவடிக்கையை உருவாக்கும் முக்கிய காரணியாக இறக்குமதி களின் மட்டமும், உள்ளடக்கமும் இருந்தவேளையில் யூலையில் இடம்பெற்ற கலவரங்கள் வளர்ச்சியில் ஒரு தடையை ஏற்படுத்தின. எனினும், சுற்றுலாவும் அதனோடிணைந்த பணிகள் துணைத்துறையும் யூலை கலவரங்களினால் மிகவும் பாதிக்கப் பட்டவையாகும். 1983இல் சுற்றுலாப் போக்குவரத்தில் 17 சதவீதத்தால் ஏற் பட்ட வீழ்ச்சி, வளர்ச்சி வீதத்தில் எதிர்க்கணிய நிலைக்குக் காரணமாயிருக்கையில் முன்னைய ஆண்டில் இதன் கூட்டப்பட்ட பெறுமதி 7 சதவீதத்தால் அதிகரித்தது.

1983இல் 1,790 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கிய தேயிலை உற்பத்தி 1956இலிருந்து பதிவுசெய்யப்பட்டவற்றில் மிகக் குறைவானதாகும். 1983இன் முதல் அரைப்பகுதியில் நிலவிய முன்னெப்போதுமில்லாத வரட்சி நிலைமைகளும், வரட்சிக் காலப்பகுதியில் வளமாக்கி குறிப்பிடத்தக்களவில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமையுமே தேயிலையின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச் சிக்குக் காரணமாகும். உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி எக்டேயரொன்றுக்கான குறைந்த சராசரி விளைச்சலில் பிரதிபலிக்கப்பட்டது. தெங்குத்துணைத்துறை பாதகமான காலநிலை நிலைமைகளினால் மேலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டது. தேயிலை வெளியீட்டில் 4.5 சதவீதத்தால் ஏற்பட்ட வீழ்ச்சியுடனொப்பிடுகையில்,

---

* இது உள்ளூராட்சிச் சபைகளினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் மீதான தரவுகளின் அடிப்படையிலமைந்ததாகும்.

தெங்கு உற்பத்தி 8.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தெங்கின் அளவு, தேயிலை, இறப்பர் ஆகியவற்றின் இணைந்த அளவிற்கு மூக்கியம் பெற்றிருப்பதால் தெங்கின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சி துறைவகைப்படியான வளர்ச்சி வீதத்தைப் பாதிக்கும் முக்கிய காரணியாக இனங்காணப்பட்டுள்ளது.

பரந்த அளவில் காணப்பட்ட வரட்சியிலும் இறப்பர், நெல், துணை உணவுப் பயிர்கள் ஆகியவற்றின் வெளியீட்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவிலான வளர்ச்சி வீதங்கள் குறிப்பிடக்கூடியனவாகும். இறப்பரைப் பொறுத்தவரையில் நீண்டகாலப்பகுதியின் வீழ்ச்சிக்குப் பின் 8 சதவீதமான வளர்ச்சி ஏற்பட்டது. துணை உணவுப்பயிர்த்துறை அதன் முன்னைய சராசரியுடன் ஒப்பிடக்கூடிய வளர்ச்சிவீதத்தைக் கொண்டிருந்தவேளையில். நெல்லைப் பொறுத்தவரையில் 14.7 சதவீதமான வளர்ச்சி எந்த ஆண்டிலும் பதிவுசெய்யப்பட்டதைவிட உயர்வானதாகும்.

பாலெடுத்தலின் கீழுள்ள பகுதிகளில் நாலில் மூன்று பங்கைக் கொண்டுள்ள தனியார்துறை உடைமையிலிருந்தே இறப்பரின் அதிகரித்த வெளியீடு பெறப்பட்டது. 1983 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் சிறந்த விலைகள் கிடைத்தமை செறிந்த பாலெடுத்தலை ஊக்குவித்தது எனக் கருதப்பட்டது. சராசரி விளைச்சலில் காணப்பட்ட முன்னேற்றம் இதனை எடுத்துக்காட்டுகின்றது. அத்தகைய நடைமுறைகள் மரங்களின் உற்பத்திக்காலத்தினைக் குறைக்கக்கூடியதாயிருந்த போதிலும் இத்துறையில் அவதானிக்கப்பட்ட வளமாக்கியின் அதிகரித்த பயன்பாடு செறிவான முறையில் பாலெடுத்தலின் பாதகமான விளைவுகளை நீண்ட காலத்தில் மட்டுப்படுத்தக் கூடியதாயிருக்கும். பெரும்போக அறுவடையினுல் முக்கியமாகப் பெறப்பட்ட நெல்லின் வெளியீடு, பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் இறுதி நிலைகளில் ஏற்பட்டமையால் வரட்சியினுல் பாதிக்கப்படவில்லை. எனினும், வரட்சி நிலைமைகளும், முதன்மையான நீர்த்தேக்கங்களில் காணப்பட்ட குறைந்த நீர் மட்டங்களும் பயிர்ச்செய்கையின் கீழிருந்த பரப்பளவு குறைவதற்கும் இதனுல் சிறுபோக அறுவடையை 1982ஐ விட 13 சதவீதத்தால் வீழ்ச்சியடையச் செய்யவும் காரணமாயிருந்தன. நெற்செய்கைக்குப் பாதகமான நிலைமை காணப்பட்டபோதும் நெல்லைவிட குறைந்தளவு நீரே துணை உணவுப்பயிர்களுக்குத் தேவைப்படுவதால் வேளாண்மையாளரை முன்பு நெல் பயிரிடப்பட்ட காணிகளில் மாற்றுப் பயிர்களைப் பயிரிடுவதை ஊக்குவித்தது. இதனுல் துணை உணவுப்பயிர் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது.

சீனியைப் பொறுத்தவரையில், மிகப்பெரும் உள்ளூர்ச்சந்தை வாய்ப்பு, விலை ஊக்குவிப்புக்கள், உற்பத்தியாளர் ஊக்குவிப்புக்களைப் பேணும் முகமாக ஏற்படுத்தப்பட்ட தீர்வைக் கொள்கை ஆகியவை காணப்பட்டபோதும் உற்பத்தி மீண்டும் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டில் ஏற்பட்ட 4 சதவீத வீழ்ச்சியைத் தொடர்ந்து 1983 இல் 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முட்டை உற்பத்தி ஒன்பது சதவீதத்தால் அதிகரித்தபோதும் உற்பத்தியாளருக்கான அரச உதவுதொகைகளையும், கவர்ச்சியான சந்தைவிலைகளையும் பெற்ற பாலுற்பத்தியும் கடற்றெழிலும் 1983இல் குறிப்பிடத்தக்க பங்கெதனையும் கொண்டிருக்கவில்லை.

மரப்பயிர் பதனிடல் தவிர்ந்த தயாரிப்புக் கைத்தொழிலின் வெளியீடு 1983இல் 2 சதவீதத்தினுல் மட்டும் அதிகரித்தது. 1982 உடன் ஒப்பிடுகையில் (9 சதவீதம்) இவ்வீழ்ச்சி கணிசமானதாகும். கைத்தொழில்துறை, தம் கட்டுப்பாட்டுக்கு அப் பாலுள்ள அபிவிருத்திகள் காரணமாக பல்வேறு இடர்களை எதிர்நோக்கவேண்டி யிருந்தது. வெளிநாடுகளில் குறிப்பாக கைத்தொழில் நாடுகளின் சந்தைகளில் காணப்பட்ட பாதுகாப்புத்தீர்வையும், தீர்வையற்ற தடைகளும், ஆடைகள். தோலுற்பத்திகள் போன்ற கைத்தொழில்களின் வளர்ச்சியைத் தொடர்ந்தும் தடைசெய்தன. இத்தகைய கைத்தொழில்களின் உற்பத்தியில் இலங்கை மற்றைய கைத்தொழில் நாடுகளுக்கெதிராக ஒப்பிடக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருந்தது, யூலையிலேற்பட்ட இனக் கலவரங்கள், பல கைத்தொழில் கூறுகளைகுறிப்பாக ஆடை தயாரிப்பு, புடவை ஆகியவற்றை அழித்து அல்லது சேதப்படுத்தியதன் மூலம் நேரடியாகவும், யூலை/ஒகத்து காலப்பகுதியில் குறைவான வேலை நேரத்தின் பாதிப் பினுல் மறைமுகமாகவும் உற்பத்தியில் பாதிப்பினை ஏற்படுத்தின. மூன்ருவது காரணம் நீர்மின்வலு உற்பத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்திய வரட்சியின் விளைவால் நாடுமுழுவதிலும் காணப்பட்ட வலுப்பற்ருக்குறையாகும். 1983இல் சாதகமற்ற சூழ்நிலையும், நிகழ்வுகளும் காணப்பட்டபோதிலும் தனியார்துறைக் கைத்தொழில் உண்மையான வளர்ச்சியில் 26 சதவீதத்தால் குறிப்பிடக்கூடியஅதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. இது 1982இன் 18 சதவீதமான வளர்ச்சி வீதத்தைவிட முன் னேற்றமானதாகும்.

எனினும், மொத்த கைத்தொழில் வெளியீட்டில் ஏறக்குறைய 60 சதவீதத் திற்கு வகைகூறும் அரசதுறை உற்பத்தி உண்மை நியதிகளில் 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இது 1982இன் 5 சதவீத வளர்ச்சிக்கு மாருனதாகும். கடந்த சில ஆண்டுகளில் அரச கைத்தொழில்துறையின் அபிவிருத்தியில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முக்கியம் வாய்ந்த காரணி மொத்தக் கைத்தொழில் வெளியீட்டில் பெற்ரேலிய தூய்மியின் தொழிற்பாடுகளின் உறுதியான செல்வாக்காகும். 1983இல் மிக நீண்ட காலத்திற்கு தூய்மி மூடப்பட்டிருந்தமையே 15 சதவீத வீழ்ச்சிக்குக் காரணமாகும். இது தவிர்ந்த வீழ்ச்சி 7 சதவீதமாகும். முன்னைய ஆண்டில் தடை யில்லாத தூய்மியின் தொழிற்பாடு அதிகரிப்பில் மூன்றில் இரண்டு பங்குக்கு வகை கூறியது. உண்மையில், அரச கைத்தொழில் துறையின் சில கைத்தொழில் கள் தேக்கநிலையைக் காட்டியதுடன் வளர்ச்சிக்கான வாய்ப்புக் குறைந்த நிலை மையையும் காட்டுகிறது. 1983இல் நைலோன் 6 செயற்றிட்டம், யூரியா பொறி போன்ற வாய்ப்பற்ற குறிப்பிட்ட பெரும் அரசதுறைச் செயற்றிட்டங்களின் தொழிற்பாடுகளை இடைநிறுத்தியமை தவிர்க்க முடியாததாயிருந்தது.

கைத்தொழில் ஏற்றுமதிகள் உறுதியான முன்னேற்றத்தைக் காட்டின. 1978இல் ஏழிலொரு பங்கிலிருந்து 1983இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளின் மூன்றிலொரு பங்குக்கு வகைகூறின. பொருளாதாரத்தில் இதன் பங்குபொதுவாகவும் சென்மதி நிலுவையில் குறிப்பாகவும் உயர்ந்து காணப்பட்ட போதும், பெற்ரேலிய துணைஉற்பத்திகள், தயாரிக்கப்பட்ட ஆடைகள் போன்ற ஏற்றுமதிகளில், இவை ஒன்றுதிரண்டு இருந்ததன் காரணமாக கொள்கை பாதிக்கப்பட்டுள்ளது. பெற்ரேலிய ஏற்றுமதிகளின் விரிவு உள்நாட்டுத்

தேவைகள் தவிர்ந்த தூய்மியின் இயலளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இப்பெற்றோலிய ஏற்றுமதிகள் இலங்கையின் ஒப்பீட்டு ரீதியான செலவு குறைவினாலோ அல்லது வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களை பெற்றதன் விளைவாகவோ ஏற்பட்டனவல்ல. தயாரிக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதிகள், வெளிநாட்டிலுள்ள பாதுகாப்புக் கொள்கைகளினால் தொடர்ந்தும் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பகுதிகளில் வளர்ச்சி தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்படுமாயின் எதிர்கால வளர்ச்சி பன்முகப்படுத்தப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் அபிவிருத்தியில் பெருமளவு தங்கியிருக்கும்.

கூட்டப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் இலங்கைக்கான ஆகக்கூடிய பங்கினைக் கணக்கிலெடுத்து நோக்குகையில் பன்முகப்படுத்தலின் அடிப்படையில் கைத்தொழிலின் வளர்ச்சியினால் நீண்டகாலத்தில் உறுதியான வளர்ச்சியைப் பெறுவது மிகவும் எளிதாக இருக்கும். வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு (வெமுமகு) கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு (கொபெபொஆ) ஆகியவற்றின் உதவிகளூடாக இலங்கைக் கைத்தொழில் பொருட்கள் வெளிநாட்டுத்தொழில் முயற்சிகளின் அதிகரித்த பங்குபற்றல் இலங்கைக் கைத்தொழில் உற்பத்திகள் வெளிநாட்டுச் சந்தைகளில் ஊடுருவுவதற்கான வாய்ப்பினை வெளிநாட்டு இணைவு நிறுவனங்களின் அமைப்புடனும் உதவியுடனும் பெறுகின்றது.

1980/81 இல் பெறப்பட்ட உயர்விலை மட்டங்களின் பின்பு 1982 இல் அடையப்பட்ட சார்புரீதியான விலை உறுதித்தன்மை 1983 இன் முதல் அரைப்பகுதியில் மிகவும் சிறப்பாகத் தொடர்ந்தது. கைத்தொழில் நாடுகளில் குறைந்து செல்லும் விலைப்போக்குகள் இலங்கையின் விலை நிலைமையில் மிதமான பாதிப்பினையே கொண்டிருந்தன. மேலும் பன்னாட்டு விலை அபிவிருத்திகளில் முக்கிய பங்கினை ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக வகிக்கும் எண்ணெய் விலைகள் 1983 இல் உண்மையில் வீழ்ச்சியடைந்தன. இலங்கையில் ஆண்டின் நடுப் பகுதியில் புள்ளிக்குப் புள்ளி என்ற அடிப்படையில் திசெம்பர்வரை விலைகள் உயரத் தொடங்கியதுடன் கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 21 சதவீதத்தால் அதிகரித்தது. முழுமையாகப் பார்க்கையில், ஆண்டுக்கான விலை அதிகரிப்பின் சராசரி வீதம் 14 சதவீதமாயிருந்தது. 1982 இன் 10.8 சதவீதத்துடன் இது ஒப்பிடத்தக்கது.

இவ் விலை நிலைமை ஏற்படுவதற்குப் பல காரணிகள் துணையாயிருந்தன. சுட்டெண்ணில் 67 சதவீத அளவைக் கொண்டிருந்த உணவு சம்பந்தமான பல விடயங்கள் விலையில் உயர்ச்சியைக் கொண்டிருந்தன. ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட உயர்ச்சியின் நேரடிவிளைவாக தேயிலையும், உற்பத்தியில் காணப்பட்ட நீண்ட வரட்சியின் ஆழமான பிரதிபலிப்பாக தெங்கும் குறிப்பிடத்தக்க விடயங்களாக விளங்கின. நிருவகிக்கப்பட்ட விலைகளில் எஞ்சியிருந்த விடயங்களான மா, பாண், பேருந்துக் கட்டணங்கள் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் கொள்விலைகளுக்கும் கீழே இருந்தமையால் அவை கணிசமான தொகையினால் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. உலக செலாவணி வீத அசைவுகளினதும், உண்மையான ஆற்றல் வாய்ந்த வீதத்தைப் பேணுதலினதும் விளைவாக ஏற்பட்ட செலாவணி வீத

மாற்றமே இம்மாற்றங்களுக்கான மற்றொரு காரணமாகும். மேலுமொரு காரணி மாச்சு வரவு செலவுத் திட்டத்தினுல் எடுத்துரைக்கப்பட்டவாறு மொத்த விற்பனை வரியின் அதிகரித்த வீதமும் அது உள்ளடக்கிய விடயங்கள் அதிகரித்தமையும் ஆகும். இறுதியாக இனக் கலவரங்களின் பின்பு மேலதிக புனர் வாழ்வுக் கொடுகடன் தேவைகளை ஈடுசெய்வதற்காக ஆண்டின் பின்னரைப் பகுதியில் தனியார் துறைக்கும், கூட்டுறவுத் துறைக்கும் வழங்கப்பட்ட கொடுகடன்களில் ஏற்பட்டவிரைவான விரிவும், ஏற்றுமதி, வர்த்தக நிதியீட்டலுக்கு இடைவெளி நிரப்பு நிதியை நாடியமையும் ஆகியன ஆண்டின் இறுதியில் விலைகளின் அதிகரித்த போக்கினை விரைவுபடுத்த உதவின.

விலையதிகரிப்புக்களின் வீதத்திலேற்பட்ட விரைவும் பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட மெதுவான அதிகரிப்பு வீதமும் உண்மையான கூலி வீதங்களில் ஏற்படும் அசைவுகளுக்கு மிகவும் சிறிதான எல்லைகளையே ஏற்படுத்தின. உண்மைக் கூலிகளை மதிப்பிடுவதற்காக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினுல் சுருக்கப்பட்ட போது பணக்கூலிகள், அரசதுறையைப் பொறுத்தவரையில் (பாடசாலை ஆசிரியர்களை உள்ளடக்கி) சிறிதான மேல் நோக்கிய அசைவைக்காட்டின. நன்கமைக்கப்பட்ட தனியார்துறையின் பணக்கூலிகள், 1982 இன் 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தால் அதிகரித்தன. மாருக, நன்கமையாத தனியார்துறை குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பெற்றுள்ளதாகக் காணப்படுகிறது. இது குறிப்பாக பெயரளவிலான கூலிகள் 18 சதவீதத்திலிருந்து 19 சதவீதம்வரை அதிகரித்த நெல், இறப்பர் பயிர்ச்செய்கையைப் பொறுத்தவரையில் உண்மையானதாகும். இதைத் தவிர கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவெனில், உண்மைக் கூலி நிலைமை பற்றிய மதிப்பீடு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கொழும்பிலுள்ள தொழிலாளர்களுக்குரிய கூலி நிலைமையைப் போன்று கிராமத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந்தக்கூடியதல்ல என்பதாகும். நன்கமைக்கப்படாததுறையிலுள்ள கூலி அபிவிருத்திகளின் குறிப்பிடக் கூடிய மற்றொரு பண்பு, பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஆணினது கூலி வீதங்களைவிட பெண்ணினது கூலி வீதங்கள் பெருமளவில் அதிகரித்துக் காணப்பட்டமையாகும்.

முறையான தரவுச் சேகரிப்பினைக்கொண்ட அரசதுறை, அரசு சார்பானதுறை, நன்கமைக்கப்பட்ட தனியார்துறை ஆகியவற்றில் காணப்பட்ட தொழில்வாய்ப்பு நிலைமை நிலையானதாகக் காணப்பட்டவேளையில் இத்துறை எதிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. அரசின் செலவுமீது குறிப்பாக மூலதனச் செலவு மீதான கட்டுப்பாடும் முதலீட்டுத்திட்டங்களில் புதிய செயற்றிட்டங்களைப் புகுத்துவதை அனுமதிக்காதுவிடும் கொள்கை தொடர்வதும் அரசதுறையிலுள்ள புதிய தொழில்வாய்ப்புக்களில் குறைவை நிர்ணயிக்கும் காரணிகளாகும். பொருளாதாரத்தின் உண்மை நிலைகள் நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக அரசு சார்பான துறை (கூட்டுத்தாபனங்கள் போன்றவை) உண்மையான ஆட்குறைப்புக்கான பல நிகழ்வுகளைக்காட்டின. ஏனைய கூட்டுத்தாபனங்களில் காணப்பட்ட அதிகரித்த தொழில் வாய்ப்பு இந்த ஆட்குறைப்பினை ஈடுசெய்வதற்குப் போதியதாயிருக்கவில்லை. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு செயற்றிட்டங்கள் போன்ற வெளிநாட்டு இணை

வின் அடிப்படையிலான தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரையில் மட்டுமே சில புதிய தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டமையைக் காணக்கூடியதாயிருக்கிறது.

மத்தியவங்கியின் நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவீடுகளிலிருந்து பெறப்பட்ட தொழில்வாய்ப்பு நிலையிலுள்ள அண்மைக் காலப்போக்குகளைக் காட்டும் குறிகாட்டி தொழிற்படையில் வேலையற்றோரின் வீதம் 1978/79இன் 14.8 சத வீதத்திலிருந்து 1981/82இல் 11.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தமையைக் காட்டுகின்றது. குறை வேலைவாய்ப்பும் மிகவும் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. 1982 இலும் 1983 இலும் தனியார் துறையில் வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க விரிவு காணப்பட்டது. ஆண்டுதோறும் தொழிற்படையின் அதிகரிப்பு 2.3 சத வீதமாக மதிப்பிடப்பட்ட வீதத்துடன் 1983இல் வேலையற்றோரின் மட்டம் 1981/82இன் மட்டத்திலாவது இருந்திருக்கவேண்டும். இவ்வவதானிப்பிற்கு உதவும் காரணி வெளிநாடுகளுக்கு, குறிப்பாக மேற்காசியா, மத்தியகிழக்கு ஆகிய நாடுகளுக்குச் செல்லும் தொழிலாளர்களின் தொகை தொடர்ந்தும் உயர்வாக இருந்தமையுடன் இது இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினையைக் குறைக்கவும் உதவியது.

சாதகமற்ற பன்னாட்டுச் சூழ்நிலைகள் காணப்பட்ட போதிலும், தாராளமாக்கலுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தில் காணப்பட்டநிலைமை, கிடைக்கத்தக்க மூலவளங்களை விஞ்சிய வகையில் பெரும் முதலீட்டுத் திட்டங்களூடாக அபிவிருத்தியில் முன்னேற்றத்தை வலிந்து ஏற்படுத்தும் முயற்சியினால் ஏற்பட்டதாகும். வெளிநாட்டுச் சொத்துக்களை எடுப்பனவு செய்யக்கூடிய வழிவகைகள் அதிகம் காணப்படாதவிடத்து மொத்த உள்நாட்டு நிலையான மூலதன அமைப்பை நிதியீட்டுவதற்கு வெளிநாட்டுச் சேமிப்புக்கள் மீது (அதாவது சலுகை உதவி, வர்த்தகக்கடன்பாடுகள் போன்றவை) தங்கியிருத்தல் அதிகமாகக் காணப்பட்டது.

மொத்த உள்நாட்டு நிலையான மூலதன அமைப்பின் வளர்ச்சி 1982இன் 30 சதவீதத்துடனொப்பிடுகையில் 1983இல் 16 சதவீதமான அதிகரிப்பைக் கொண்டு குறிப்பிடத்தக்களவில் மெதுவான போக்கைக் காட்டியது. இதற்கு அரசதுறையில் புதிய முதலீட்டுச் செயற்றிட்டங்களை நிறுத்தியமையே ஓரளவு காரணமாகும். யூலையில் ஏற்பட்ட இனப்பிரச்சினைகளினால் தனியார் துறையில் காணப்பட்ட நிலையற்ற தன்மையின் பாதிப்பாக இது இருக்கலாம். சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக மொத்த உள்நாட்டு நிலையான மூலதன அமைப்பு 1982இன் 30.6 சதவீதத்திலிருந்து 1983இல் 28.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதுவரையில் உயர்வாயிருந்த அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனாக (சந்தைவிலைகளில்) இருந்த நுகர்வு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 22.2 சதவீத வளர்ச்சிக்கெதிராக 1983இல் 19.7 சத வீதத்தால் மட்டும் அதிகரித்தமை மற்றொரு சாதகமான முன்னேற்றமாகும். இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்பான வகையில் உள்நாட்டுச் சேமிப்புக்களின் விகிதம் 11.8 சதவீதத்திலிருந்து 13.6 சதவீதமாக அதிகரித்தது. வெளிநாட்டிலிருந்தான தனியார் மாற்றல்களை உள்ளடக்கிய

அட்டவணை 1.3

## முதலீடுகள் — சேமிப்புக்கள் 1979 — 1983

| வகை | 1979 | | 1980 | | 1981 | | 1982 | | 1983 (அ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ப. இ. ரூபா | சத வீதம் | ப. இ. ரூபா | சத வீதம் | ப. இ. ரூபா | சத வீதம் | ப. இ. ரூபா | சத வீதம் | ப. இ. ரூபா | சதவீதம் |
| 1. **முதலீடு–சேமிப்புக்கள் (உள்நாடு, வெளிநாடு)** | 13,527 | 100.0 | 22,465 | 100.0 | 23,610 | 100.0 | 30,608 | 100.0 | 35,036 | 100.0 |
| **கழிக்குக:** பொருட்களும் காரணியல்லாப் பணிகளும் (தேறிய) ... | — 6,309 | — 46.6 | —15,022 | — 66.9 | —13,667 | — 57.9 | —18,757 | — 61.3 | — 18,437 | — 52.6 |
| 2. **மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள்** ... | 7,218 | 53.4 | 7,443 | 33.1 | 9,943 | 42.1 | 11,851 | 38.7 | 16,599 | 47.4 |
| **கூட்டுக:** தேறிய காரணிப்பணிகள் ... | — 239 | — 1.8 | — 432 | 1.9 | — 1,868 | — 7.9 | — 2,034 | — 6.6 | — 3,164 | — 9.0 |
| தேறிய தனியார் மாற்றல்கள் ... | 754 | 5.6 | 2,260 | 10.1 | 3,918 | 16.6 | 5,494 | 17.9 | 6,400 | 18.2 |
| 3. **மொத்தத் தேசிய சேமிப்புக்கள்** ... | 7,733 | 57.2 | 9,271 | 41.3 | 11,993 | 50.8 | 15,311 | 50.0 | 19,835 | 56.6 |
| 4. வெளிநாட்டுச் சேமிப்புக்கள் (1-3) ... | 5,794 | 42.8 | 13,194 | 58.7 | 11,617 | 49.2 | 15,297 | 50.0 | 15.201 | 43.4 |
| தேறிய அலுவலக மாற்றல்கள் ... | 2,239 | 16.6 | 2,281 | 10·1 | 3,118 | 13.2 | 3,379 | 11.0 | 4,016 | 11.5 |
| தேறிய சலுகை ரீதியான கடன்கள் (ஆ) ... | 2,365 | 17.5 | 2,712 | 12.1 | 3,279 | 13.9 | 4,291 | 14 0 | 5,796 | 16.5 |
| தேறிய வர்த்தக ரீதியான கடன்பாடுகள் ... | 209 | 1.5 | 3,164 | 14.1 | 3,465 | 14.7 | 5,198 | 17.0 | 4,108 | 11.7 |
| நேரடி முதலீடுகள் ... | 731 | 5.4 | 710 | 3.2 | 947 | 4.0 | 1,323 | 4.3 | 893 | 2.5 |
| தேறிய வெளிநாட்டுச்சொத்துக்களின் பயன்பாடு ... | — 793 | — 5.9 | 2,967 | 13.2 | 406 | 1.7 | 1,149 | 3.8 | — 296 | — 0.8 |
| ஏனையவைகள் (தேறிய) (இ) ... | 1,043 | 7.7 | 1,360 | 6.0 | 402 | 1.7 | — 43 | — 0.1 | 684 | 2.0 |
| 5. சந்தை விலைகளில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | | | | | | | | |
| i. முதலீடுகள் ... | | 25.8 | | 33.8 | | 27.8 | | 30.6 | | 28.6 |
| ii. மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் ... | | 13.8 | | 11.2 | | 11.7 | | 11.8 | | 13.6 |
| iii. மொத்த தேசிய சேமிப்புக்கள் ... | | 14.8 | | 13.9 | | 14.1 | | 15.3 | | 16.2 |
| iv. வெளிநாட்டுச் சேமிப்புக்கள் ... | | 11.0 | | 19.9 | | 13.7 | | 15.3 | | 12.4 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) வர்த்தக ரீதியான கடன்பாடுகள் தவிர்ந்த மத்திய அரசின் தேறிய வெளிநாட்டுக் கடன்பெறுகைகள்

(இ) சி. எ. உ. ஒதுக்குகள், சென்மதி நிலுவையிலுள்ள பெறுமதிச் சீராக்கங்கள் பிழைகளும் தவிர்ப்புக்களும் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மொத்த தேசிய சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 16.2 சதவீதத்துக்கு அதிகரித்தன. முழுமையாகப் பார்க்கையில் குறைந்துசெல்லும்முதலீடு உயர் அளவிலான தேசிய சேமிப்புக்கள் ஆகியவற்றின் இணைவினால், முதலீட்டு நிதியிடலுக்குத் தேவைப்படும் மொத்த அளவில் வெளிநாட்டுச் சேமிப்புக்களில் தங்கியிருத்தல் 43 சதவீதத்துக்குக் குறைக்கப்பட்டது. இதனுடன் ஒப்பிடத்தக்க நிலையொன்றை அறிவதற்கு 1979ஆம் ஆண்டுக்குப் பின்நோக்கிச் செல்லுதல் அவசியமாகும்.

இம்முன்னேற்றங்கள் வரவேற்கத்தக்கதாயிருந்தபோதிலும் திருப்திப்படத்தக்க தொன்றாக இருக்கவில்லை. மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் அதிகரித்தன. ஆனால் ஏற்றுமதிகளின் அளவு இவ்வாண்டில் தேக்க நிலையிலிருந்தது. பண்ட விலைகளில் மாறிச்செல்லும் நிலைமை காணப்படாததுடன் வர்த்தக மாற்றுவிகிதப் பெறுகைகள் இல்லாமற் செய்யப்படுமிடத்து வெளிநாட்டுச் சேமிப்புக்கள் மீது தங்கியிருக்கும் நிலை அதிகரிக்கும் அல்லது அரச தனியார்துறை முதலீடுகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டி நேரிடும். சலுகை உதவிகளுக்கான வாய்ப்புக்களும் நிச்சயமற்றதாகவிருக்கின்றன. மேலும் கடன்தீர்ப்பனவுகளுக்கான கடினமான விளைவுகளை நோக்கும்பொழுது மேலும் பெருமளவிலான வர்த்தகக் கடன்பாடு மிகவும் பொருத்தமற்றதாகும். எனவே எதிர்காலத்திலான முதலீட்டுச் செலவுகள் கட்டாயமாக தேசிய சேமிப்புக்களின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு வேலையாளர்களின் பண வனுப்பல்களை அதிகரித்த மட்டத்தில் தொடர்ந்தும் ஈர்ப்பதற்கும் நுகர்வைக் கட்டுப்படுத்துவதற்கும் சேமிப்பை அதிகரிப்பதற்குமான கொள்கைகளின் தேவை மீண்டும் வலியுறுத்தப்படவேண்டியதில்லை.

1983இல் குறுகிய பணநிரம்பல் ($M_1$) 1982இன் 17 சதவீதத்திற்கெதிராக 1983இல் 25 சதவீதத்தால் அதிகரித்தது. 1983இன் கடைசிக் காலாண்டில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு தேயிலையிலேற்பட்ட திடீர் உயர்ச்சியினாலும் வரவுசெலவுத் திட்டக்குறையின் ஒன்றுசேர்ந்த விளைவினாலும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மேலதிகத் திரவ நிலைமையின் விளைவாகும்.

யூலை கலவரங்கள் போன்ற சில எதிர்பார்க்கப்படாததும் சில வெளிக்காரணிகளும் வெளிநாட்டுச் செலாணிவீதச் சந்தையில் இடம்பெற்ற உத்தேச நடவடிக்கையும் ஏற்றுமதித் தொகைகளின் மீள அனுப்பல்களில் ஏற்பட்ட தாமதங்களும் 1983இல் நாணய நிருவாகத்தில் சிக்கலான நிலைமையை உருவாக்கின. கட்டற்ற சந்தைச் சூழ்நிலைகளில் நியாயமான உறுதியான விலை நிலைமைகளின் கீழ் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதற்கு வேறு துணை வழிமுறைகளின்றி நாணயக்கொள்கை மட்டம் போதியதற்றதாகும். கிடைக்கத்தக்க விலைக்குறிகாட்டிகளினால் அளவிடப்பட்டவாறு பணவீக்கம் குறிப்பாக ஆண்டின் இறுதிப்பகுதியில் விரைவுபடுத்தப்பட்டுக் காணப்பட்டது 1982இல் 10.8 சதவீதத்தினால் அதிகரித்த கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி 1983இல் 14 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

1983இல் 16 சதவீதத்தால் அதிகரித்த உள்நாட்டுக் கொடுகடன் விரிவு 1982இல் பதிவுசெய்யப்பட்ட 25 சதவீதத்திலிருந்து மிகவும் குறைவாகக் காணப் பட்டது. மேலும் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்தும் பணநிரம்பலின் மீது சுருக்கத்தாக்கத்தை ஏற்படுத்திய தேறிய வெளிநாட்டு வங்கிச் சொத்துக் களில் ஏற்பட்ட மாற்றம் 1983இல் ஆண்டின் இறுதிக் காலாண்டில் விரிவான தூண்டுதலை ஏற்படுத்தியது. அத்துடன் வங்கிமுறை "ஏனைய பொறுப்புக்கள்" (தேறிய) நடத்தையின் மீதான தாக்கம் 1977ஆம் ஆண்டிற்குப் பின்னைய எந்த வொரு ஆண்டினையும் விட 1983இல் மிகக்குறைவானதாக இருந்தது.

உள்நாட்டுக் கொடுகடன் விரிவில் காணப்படும் குறைந்த அளவிலான அதி கரிப்பு வீதம் உயர்ந்து செல்லும் விலையுடன் எவ்வாறு இணைந்திருக்க முடியுமென் பதை அவற்றின் மூலக் கூறுகளில் காணப்படும் ஒன்று சேர்ந்த எண்தொகை களின் பிரிவுகளிலிருந்தே விளங்கிக்கொள்ளலாம். 1983இல் உள்நாட்டுக் கொடு கடன் பிரிவின் முக்கியமான பண்பு, கொடுகடனுக்கான அரசின் கேள்வியற்ற நிலைமை காணப்பட்டமையேயாகும். அரசுக்கான தேறிய கொடுகடன், 1981இன தும் 1982இனதும் முறையே 42 சதவீதத்திற்கும் 34 சத வீதத்திற்கும் எதிராக 2 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. உள்நாட்டுக் கொடுகடன் விரிவில் 5 சத வீதம் மட்டுமே அரசின் தேவைகளுக்கு உதவுவதாகக் காணப்பட்டமை இன்ன மும் முக்கியமானதாகும்.

அரசு வங்கித் தொழில் முறையில் தங்கியிருத்தல் பெருமளவில் குறைக்கப் பட்டிருப்பதைப் பல காரணிகள் காட்டுகின்றன. அரசின் வருவாய் மிகவும் கணிச மான அளவில் அதிகரித்தமைக்கு ரூ. 15,000 இலட்சங்கொண்ட மத்திய வங்கியின் இலாபங்கள் திறைசேரிக்கு மாற்றப்பட்டமையும் உயர் அளவிலான இறக்குமதித் தீர்வைகளும் மொத்த விற்பனை வரிகளும் தேயிலைப் பெறுமான விகித வரியிலி ருந்தான அதிகரித்த சேகரிப்பும் காரணங்களாக அமைந்தன. நிதியிடலைப் பொறுத்தவரையில் வங்கியல்லா மூலங்களினூல் ரூபாப் பிணைகளுக்கு வழங்கப் பட்ட அதிகரித்த உதவு தொகைகள், வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளின் பயன்பாடு ஆகியன உள்நாட்டு வங்கிகளை நாடலைக் குறைத்தன. செலவின் மீது குறிப்பாக மூலதனச் செலவில் ஏற்பட்ட உறுதியான கட்டுப்பாட்டின் விளை வாக மொத்த வரவு செலவுத் திட்டத்தில் குறைப்புக்கள் ஏற்பட்டன.

அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் உண்மையில் 1983இல் வீழ்ச்சியடைந்தது. தேயிலை விலையில் உச்சமான அதிகரிப்பைப் பெற்ற பெருந் தோட்டக் கூட்டுத்தாபனங்கள் வங்கித் தொழில் முறைக்கான தமது கடன் பாட்டினைக் குறைத்துக் கொள்ளக்கூடியதாயிருந்தமை சாதகமானதொரு அபி விருத்தியாகும். அரச உதவியூடாகவெனினும் வங்கித் தொழில் முறைக்கான வெளிநிற்கும் பொறுப்பு நீக்கப்பட்டமைக்கு தேசிய புடவைக் கூட்டுத் தாபனமும் மற்றொரு முக்கிய உதாரணமாகும். ஆயினும் கூட்டுத்தாபனத் துறை வங்கிக் கொடுகடனில் தங்கியிருத்தலைக் குறைப்பதற்குப் பின்னணியி லிருந்த வேறு பல காரணிகள் பெரும் திருப்தியற்ற நிலையிலிருந்தன.

அட்டவணை 1.4

நாணய அளவுகள் 1978 — 1983

(ப. இ. ரூபாய்களில்)

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|
| **உள்நாட்டுக் கொடுகடன் மாற்றங்கள்** ... | **1,900** | **4,296** | **10,832** | **8,163** | **8,431** | **6,895** |
| அரசுக்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | -1,126 | 1,057 | 6,052 | 3,817 | 4,361 | 383 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ... | 693 | 984 | 776 | 365 | 190 | - 292 |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் அதிகரிப்பு ... | 443 | 233 | -540 | - 74 | - 106 | 635 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் அதிகரிப்பு ... | 1,890 | 2,022 | 4,544 | 4,055 | 3,986 | 6,170 |
| **தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **1,884** | **1,218** | **-3,177** | **- 690** | **- 568** | **815** |
| **மொத்தச் சொத்துக்கள், பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **3,784** | **5,514** | **7,655** | **7,473** | **7,863** | **7,710** |
| விரிந்த பணநிரம்பலில் (M2) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 2,175 | 4,166 | 4,803 | 4,587 | 6,063 | 6,747 |
| ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 1,609 | 1,348 | 2,852 | 2,886 | 1,800 | 963 |

**நாணய அளவுகளில் சதவீத அதிகரிப்புக்கள்**

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுக் கொடுகடனின் சதவீத அதிகரிப்பு ... | 21.7 | 40.2 | 72.4 | 31.6 | 24.8 | 16.3 |
| மொத்த சொத்துக்கள், பொறுப்புக்களின் சதவீத அதிகரிப்பு ... | 30.3 | 33.9 | 35.2 | 25.4 | 21.3 | 17.2 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசின் சதவீதம் ... | -59.3 | 24.6 | 55.9 | 46.8 | 51.7 | 5.6 |
| மொத்த உளநாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசு அல்லாத்துறையின் சதவீதம் | 159.3 | 75.4 | 44.1 | 53.2 | 48.3 | 94.4 |
| விரிந்த பண நிரம்பலின் (M2) சதவீத அதிகரிப்பு ... | 25.0 | 38.3 | 31.9 | 23.1 | 24.8 | 22.1 |
| குறுகிய பணநிரம்பலின் (M1) சதவீத அதிகரிப்பு ... | 10.6 | 29.2 | 22.9 | 6.3 | 17.3 | 25.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிதித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் பல கூட்டுத்தாபனங்கள் உள்நாட்டு வங்கித் தொழில்முறைக்கு அப்பால் கரைகடந்த வெளிநாட்டுத் துறையினை நாடியதுடன் நாணயக் கொள்கையின் செயல்பாட்டிற்கு ஒரு பயமுறுத் தலாகவும் விளங்கியது. உள்நாட்டு வங்கிகள் மீதான அமுக்கம் குறைவுற்ற போதிலும் இக்கடன்பாடுகளின் பணவீக்க உள்ளாற்றல் மிகவும் உண்மையான தாக விளங்கியது. குறிப்பாக உயர்ந்த தொழிற்பாட்டு இலாபங்களையும் வலுவான பணப்பாய்ச்சலையும் கொண்டிருந்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க வெளிநாட்டுக் கொடுகடன்களை பெறக் கூடியதாகவிருந்தமையால் கடுமையான தொழிற்படு மூலதனப் பற்றுக்குறை களை அனுபவிக்கும் ஏனைய கூட்டுத்தாபனங்களுக்கு இக்கூட்டுத்தாபனம் ஒரு ஊன்றுகோலாக இருந்தது.

அண்மைய ஆண்டறிக்கைகள் அரசு வங்கித் தொழில்முறையை அதிகளவில் நாடியமைக்கு அதிகரித்த திருப்தியின்மையைத் தெரிவித்து வந்ததுடன் கொடு கடன் சந்தையிலிருந்து தனியார்துறை நீக்கப்பட்டும் இருந்தது. இது தனியார் துறை முயற்சிகளை ஊக்குவிக்கும் கொள்கைப் போக்குக்கு முரண்பட்டதாகக் காணப்பட்டது. ஆயின் 1983ஆம் ஆண்டு இதற்கு நேர்மாறான ஒரு நிலைமையைக் காட்டுகிறது. 1983இல் ஏறக்குறைய 90 சதவீதமான உள்நாட்டுக் கொடுகடன் விரிவு தனியார் துறையிலேயே காணப்பட்டது. ஒவ்வொரு ஆண்டுக்கான அடிப் படையில் தனியார் துறைக்கான கொடுகடன் விரிவு 1982க்கான 26 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 32 சதவீதமாகக் காணப்பட்டது. தனியொரு துறைக்கான கொடு கடன் அன்றி மொத்தக் கொடுகடனே முக்கியமாகும். இதனைப் பொறுத்தவரையில் மொத்தக் கொடுகடனின் விரிவு வீதம் 1982இன் 24.8 சதவீதத்திலிருந்து 1983இல் 16.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 1982இல் மொத்தக் கொடுகடன் விரிவு குறைவாகக் காணப்பட்டாலும் 1983இன் இறுதிக் காலாண்டில் காணப்பட்ட மேலதிக திரவத்தன்மைக்குக் காரணமான தேறிய வெளிநாட்டு வங்கிச் சொத்துக் களில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்புடன் இணைந்திருந்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிவீதம் மிகவும் குறைவாகக் காணப்பட்ட போதும், 1982ஐவிட 1983இல் ஏற்பட்ட பெருமளவான கொடுகடன் விரிவுக்குப் பலகாரணிகள் அடிப்படையாயிருந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின்வளர்ச்சி வீதமும், தனியார் முதலீடும் குறைவாகக் காணப்பட்டபோதிலும், தனியார் துறைக்கான மொத்தக்கொடுகடன் 1982ஐவிட 1983இல் பெருமளவு சதவீதத்தால் அதிகரித்தது. கொடுகடனுக்கான கேள்வி முதலீட்டினால் ஊக்குவிக்கப்பட்டதென்ப தைவிட நுகர்வோரினாலேயே கூடுதலாக வழிநடத்தப்பட்டதென்பது தெளிவாகும். இதன்படி ஒற்றோபரில் மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டங்களில் கொடு கடன் விரிவைக் குறைப்பதற்கான தற்காலிக வழிமுறையொன்றாக கொடுகடன் விரிவின் மீது அளவுக் கட்டுப்பாடுகளை விதித்தது. இது நவெம்பரில் நீக்கப்பட்டது. ஆயினும் இந்நேரத்தில் தேயிலை, தெங்கு ஆகியவற்றின் உயர் விலைகள் ஒதுக்கு களின் மட்டத்தை மிகவும் வாய்ப்பான மட்டங்களுக்கு உயர்த்தியமையினால் வர்த்தக மாற்று விகிதம் இலங்கைக்குச் சாதகமாக மாற்றமடைந்தது. வெளி நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பு வங்கி நிதியின் நாடலுக்கான தேவையைக்

குறைத்திருக்கவேண்டும். உயர் விலைகள் காணப்பட்ட நிலைமையில், ஏற்றுமதி யாளர்களுக்கு உயர்மட்டங்களில் இடைவெளியை நிரப்புவதற்கான நிதிதேவைப் பட்டது. மத்திய வங்கியின் ஏற்றுமதி மீள் நிதியிடல் திட்டம், ஏற்றுமதிகளுக்கு வசதியளிக்குமுகமாக விரிவுபடுத்தப்பட்டதுடன் ரூ. 10,700 இலட்சத்தால் அதிகரிக் கப்பட்டது. இது ஏற்றுமதி அடிப்படையல்லாத துறைகளுக்குக் கொடுகடன் கேள்வியை நிதியீட்டுவதற்கு நிதியை வழங்கும் ஆற்றலைக் கொண்டிருந்தது. யூலையில் ஏற்பட்ட கலவரங்கள் மேலும் வங்கிக் கொடுகடனுக்கான கேள்வியை ஏற்படுத்தின. குறுங்கால நிதியிடல், நீண்ட தவணை நிதியிடல் ஆகிய இரண்டுக்கு மான பங்கு மாற்றுப் பிணை சந்தையின் முறிவு, நேரடியாகவோ, மறைமுக மாகவோ பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகள் கடன்கள் முற்பணங்களை மீளக் கொடுப்பனவு செய்வதில் ஏற்பட்ட தாமதம், செலாவணிச் சந்தையின் தளம் பலினால் ஏற்றுமதி வருவாய்களை மீளவனுப்பலில் ஏற்பட்ட தாமதம், சேதப் படுத்தப்பட்ட தொழில் முயற்சிகளுக்கான புதிய கொடுகடன் ஆகியன உயர் மட்டத்தில் பேணப்பட்ட கொடுகடன் விரிவினை ஏற்படுத்தின.

முன்னைய ஆண்டுகளுக்கான தரவுகளில் காட்டப்பட்டவாறு மூலதனச் செலவை நிதியீட்டுவதற்காக அரச துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் உள் நாட்டு நாணய உறுதிப்பாட்டிற்கு அதிகளவில் அச்சுறுத்தலாக இல்லாமைக்கு தனியார் துறைக்கு வழங்கப்படும் கொடுகடனைப் பொறுத்தவரையில், இறக்குமதி களாகப் பெறப்படும் அளவினைவிட இத்துறையில் மிகவும் கூடுதலாக இருந்ததே காரணமாகும். இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் இருப்புக்களை அதிகரிப் பதற்காகவும், ஏற்றுமதிப் பொருள்களை இருப்புக்களில் வைத்திருப்பதன் மூலம் நாணயத்தளம்பல்கள், விலை அதிகரிப்புக்கள் ஆகியவற்றின்மூலம் இலாபம்பெறவும், யூலைக் கலவரங்களினால் சேதமாக்கப்பட்ட முயற்சிகளுக்கு நிதியிடுவதற்குமாக தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக உள்ளூர் விலைகளில் தாக்கங்களைப் பிரதிபலித்தன.

உள்நாட்டுக் கொடுகடன் விரிவிற் பங்கெடுத்த கொடுக்கல் வாங்கல் நட வடிக்கை ஒன்றினைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டுமெனில் அது நெற்சந்தைப் படுத்தற் சபையின் கொள்வனவுகளுக்காகப் பெறப்பட்ட சந்தைப்படுத்தலுக் கான மீள்நிதியிடல் கடனேயாகும். இருப்புக்களை விற்பனை செய்யமுடியாத நிலை யுடன் இணைந்த உயர்மட்டத்திலான கொள்வனவுகள் வெளிநிற்கும் கொடுகடனை விரும்பத்தக்க எல்லைகளுக்கப்பால் மிக உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்தன. முன் னேற்றமடைந்த சென்மதி நிலுவை நிலையும் தொடர்ந்துவந்த வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையின் ஒன்றுசேர்ந்த பாதிப்பும் ஆண்டின் இறுதி மாதங்களில் தேறிய வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களில் விரிவுத்தாக்கத்தை ஏற் படுத்தின.

நாணயக் கொள்கையில் ஒழுங்கினையும் உறுதித் தன்மையினையும் ஏற்படுத்து வதற்காக தனியார்துறைக்கான கொடுகடன் ஒற்றோபர் இறுதியில் இருந்த மட் டங்களில் நிலையாக வைக்கப்பட்டன. இது கேள்வி வைப்புக்கள் தவணை/சேமிப்பு வைப்புக்கள் ஆகியவற்றின் மீதான அதிகரித்த சட்டநியதித் தேவைகளினாலும்

Central Bank of Sri Lanka
22668
10 JUN 2009
LIBRARY & INFORMATION CENTRE
Communications Department

தண்டவீதத்தில் கடன் வழங்குதல் முற்ருக இடை நிறுத்தப்பட்டமையினுலும் நவெம்பர் இறுதியில் நீக்கப்பட்டது. கேள்வி வைப்புக்களுக்கான ஒதுக்கு விகிதங்கள் 14 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாகவும் தவணை சேமிப்பு வைப்புக்கள் 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும் அதிகரித்தன. மேலும் திசெம்பரில் பயன் படுத்தப்படாத மேலதிகப்பற்று நிலுவைகள் மீது 16 சதவீதமான ஒதுக்கு விகிதமும் விதிக்கப்பட்டது.

விலைகளின் மிதமான அதிகரிப்பு ஏற்பட்ட காலப் பகுதியின் பின்பு இதுவரை காலமும் காணப்பட்ட கடுமையான நாணயக் கொள்கை தளர்த்தப்பட்டமை கொடுகடன் அளவுக் கட்டுப்பாட்டின் தாக்கத்தினைப் பெற்றதாகக் கருதப்பட்ட ஏற்றுமதித்துறையினதும் ஏனைய முன்னுரிமைத் துறையினதும் சிறப்பான தேவைகளுக்கான விளைவாகக் காணப்பட்டது. இது கொடுகடனின் கிடைக்கக்கூடிய தன்மை, அதன் செலவு ஆகிய இரண்டிலும் பிரச்சினைக்குரியதாகவே காணப்பட்டது. வங்கி வீதம் 1 சதவீதப் புள்ளியால் குறைக்கப்பட்ட வேளையில், ஏற்றுமதிகளுக்கான சலுகை வீதத்திலான மீள்நிதியிடல் செலவு மூன்று சதவீதப்புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளையில் மரபுரீதியான ஏற்றுமதிகளுச்கான மீள் நிதியிடலின் அளவு இரண்டு மடங்குக்கும் அதிகமாகக் காணப்பட்ட வேளையில் தெரிந்தெடுக்கப்பட்ட மரபல்லா ஏற்றுமதிகளுக்கு வழங்குவதற்காக புதிய துணை நிரப்பு வசதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. வங்கித் தொழில் முறையின் அதிகரித்த திரவத்தன்மை, சேமிப்புக்களைத் திரட்டும் வீதத்தின் குறைப்பைத் தொடர்ந்து ஏற்பட்டது. பெயரளவு வீதங்களின் குறைப்பினுலும் அதிகரித்த விலைகளினுலும் உண்மை வீதங்களில் நேர்க்கணிய வருவாயில் ஏற்பட்ட வங்கித் தொழில் முறையில் பொதுமக்களின் உண்மையான சேமிப்பு இருப்புக்களைக் குறைப்பதில் தவிர்க்க முடியாத விளைவுகளைக் கொண்டிருந்தது.

மீளச் செலுத்தாத பயிர்ச்செய்கைக் கடன்கள் உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்தமையினுல் 1978இல் அரச உத்தரவாதங்கள் மீளப்பெறப்பட்டமையின் விளைவாக பயிர்ச் செய்கைக் கடன்கள் மிகவும் அரிதாகவே வழங்கப்பட்டன. இதனுல் வேளாண்மைத்துறையில் கொடுகடன் தேவைகளை ஈடுசெய்வதில் மிகவும் மெதுவான முன்னேற்றமே காணப்பட்டது. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் நெற் செய்கைக்காகப் பெரும் பகுதியைக் கொண்டிருந்த வங்கிக் கடன்களில் 1983இல் ஏற்பட்ட 16 சதவீத அதிகரிப்பு குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டாலும் வேளாண்மைத்துறையிலுள்ள கொடுகடன் தேவைகளுடன் ஒப்பிடுகையில் இது போதியதற்றதாகும். தகுதிவாய்ந்த வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட நெற்கடன்களின் அளவு (ரூ. 3,300 - ரூ. 5.600) போதியதாகக் காணப்பட்டபோதிலும், கொடுகடன் தேவைப்படும் வேளாண்மையாளர்களை உள்ளடக்கும் தன்மை குறைவாகக் காணப்பட்டமை அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் திருப்தியற்ற பண்பாகும். 1983இல் மீளப் பெறும் வீதத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் சாதகமானதொரு விடயமாகும். சராசரியாகப் பார்க்கையில் 70 சதவீதமான கடன்கள் மீளப் பெறப்பட்டன. வேளாண்மைக் கொடுகடன் விரிவினை மேற்கொள்வதற்காக மீளப் பெறும்வீதத்தில் உறுதியான முன்னேற்றத்தை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதா

கும். வேளாண்மையாளர்களை நிறுவகக்கொடுகடன்கள் அல்லாத பெறுமதி வாய்ந்த மூலங்களிலிருந்து கடன்பெறுதலைத்தடுத்து வங்கித்தொழில்முறைக்குள்புகுத்துவதே வங்கிக் கொள்கையின் தற்போதைய ஊக்குவிப்பாயிருப்பதனால், கடன் செலுத்தத் தவறுதலைத் தடுப்பதற்கான தொழிற்படும் வழிமுறைகளின் வகையானது கிராமியக் கொடுகடன் மதியுரைச் சபைபோன்று கொள்கை உருவாக்கச் சபைகளின் சமமான கவனத்தைப் பெறவேண்டும்.

இவ்வாண்டில் மூலதனச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவில் அதிகரித்தன. தொடக்கச் சந்தையில் புதிய பங்கு வழங்கல்கள், முன்னைய ஆண்டிற்கான 19 பங்கு வழங்கல்களுடன் ஒப்பிடின் 37 ஆக அதிகரித்தன. இதன்படி புதிய பங்குகளின் பொருளளவுப் பெறுமதி 1982இன் ரூ. 3,710 இலட்சத்திலிருந்து 1983இல் ரூ. 10,040 இலட்சமாக அதிகரித்தது. முன்னைய ஆண்டுக்கெதிராக, பொறியியல் பிரிவு, உந்து, கைத்தொழில் பிரிவுகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கூடிய எண்ணிக்கையிலான புதிய பங்குகள் வழங்கப்பட்டன. உணவகங்கள், சுற்றுலாக் கைத்தொழில் ஆகியவற்றுக்கான புதிய வழங்கல்கள் [ இரண்டாவது படியாகக் காணப்பட்டன. முன்னைய ஆண்டைப் போலவே வரிவிடுப்பைப் பெறும் நோக்கத்துக்காக கலண்டர் ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் இடம் பெற்ற தொடக்கச் சந்தையின் நடவடிக்கைகள் வருமான வரி மதிப்பீட்டு ஆண்டின் இறுதிக் காலாண்டுடன் இணைந்திருந்தன. மேலும் பொதுமக்களின் பங்குகளைக் கொண்ட கம்பனிகளுக்குக் கிடைக்கக்கூடிய வரிவிடுப்பின் பயனைப் பெறுவதற்காக 1983 மாச்சு 31 வரையுமே புதிய பங்கு வழங்கல்கள் பெருமளவில் வழங்கப்பட்டன. எனினும் இரண்டாந்தரச் சந்தைகளின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ந்தும் தாழ்ந்த நிலையிலேயே காணப்பட்டன.

அரசின் இறை நடவடிக்கைகளின் முழுமையான செயலாற்றம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மட்டுமன்றி, 1980 இறையாண்டிலிருந்தான வரவு செலவுத் திட்டச் செயலாற்றத்துடன் ஒப்பிடுகையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. அண்மைய கடந்த காலத்தில் சில வேளைகளில் இறைக் கொள்கையின் சமமற்ற தன்மையும், நிதியீட்டல் முறையும், விலைகள் சென்மதி நிலுவை, செலாவணி வீதம் ஆகியவற்றின் உறுதியற்ற நிலைமைக்கான முக்கிய மூலமாகக்காணப்பட்டன. இதற்குமாறாக 1983இல் காணப்பட்ட இம்மாற்றமான நிலைமை, இறைக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒன்றுசேர்ந்த முயற்சியினைப் பிரதிபலிக்கிறது.

முதலில் அரசு நடைமுறைக் கணக்கு மிகையொன்றை ஏற்படுத்தக் கூடியதாயிருந்ததுடன் இதனால் மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கு உதவு தொகையை வழங்கக் கூடியதாயுமிருந்தது. இதன் விளைவாக, உள்நாட்டு வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்பாடுகள் முதலீட்டுச் செலவுகளை நிதியீட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. இரண்டாவதாக பணவீக்கத் தன்மையைக் கொண்ட வங்கிக் கொடுகடனுக்கு அரசின் ஆதரவு அண்மைய கடந்த காலத்தின் 4 சதவீதத்திற்கும் அதிகமான மட்டங்களிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு சத வீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. உண்மையில் காசு நிலுவைகளின்

உடைமைகளுக்காகச் சீராக்கம் செய்யப்பட்டபொழுது பொருத்தமான உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதங்களினால் அளவிடப்பட்டவாறு 1983இற்கான வரவு செலவுத் திட்டத்தினது விரிவுத்தாக்கம் 1977இல் ஏற்பட்ட பொருளாதார, நிதி மீளமைப்புக்களிலிருந்தான முழுக் காலப்பகுதியிலும் ஆகக் குறைந்ததாகக் காணப்பட்டது. இறை நிலைமையின் இத் தொடர்பான சாதகமான தன்மைக்கு எல்லா முக்கிய இறை மாறுபாடுகளும் காரணமாயிருந்த வேளையில் வருவாய் செயலாற்றம், வரவு செலவுத் திட்டத்தின் இறுதி விளைவினைப் பாதித்த முக்கியமான பங்குக் காரணியாக தனியாகக் குறிப்பிடப்படவேண்டும்.

அட்டவணை 1.5

**இறை அளவுகள் 1978 — 1983**

(ரூபாய் பத்து இலட்சங்களில்)

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982* | 1983* |
|---|---|---|---|---|---|---|
| வருவாய் ... | 11,688 | 12,730 | 14,068 | 16,228 | 17,809 | 25,210 |
| செலவினம் ... | 18,853 | 21,521 | 30,343 | 31,094 | 37,900 | 46,772 |
| முற்பணக் கணக்குகள்(—)உட்பட மீண்டெழும் செலவினம் ... | 12,239 | 12,531 | 16,489 | 17,729 | 19,231 | 25,078 |
| நடைமுறைக் கணக்கின் பற்றுக் குறை (—) மிகை (+) | - 551 | + 200 | -2,421 | -1,493 | -1,422 | + 132 |
| மூலதனச் செலவினம் ... | 6,614 | 8,991 | 13,854 | 13,373 | 18,669 | 21,694 |
| மொத்த வரவு செலவு திட்டக்குறை ... | 7,165 | 8,791 | 16,274 | 14,861 | 20,091 | 21,562 |
| நிதியிடல் — | | | | | | |
| வெளிநாட்டு ... | 4,454 | 4,237 | 6,735 | 8,208 | 8,794 | 10,902 |
| உள்நாட்டு வங்கியல்லா ... | 2,486 | 3,902 | 2,484 | 2,779 | 7,607 | 10,151 |
| உள்நாட்டு வங்கி ... | 167 | 680 | 7,126 | 3,917 | 4,006 | 1,203 |
| காசு நிலுவைப் பயன்பாடு ... | 58 | - 28 | - 72 | - 38 | - 315 | - 694 |

**(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)**

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982* | 1983* |
|---|---|---|---|---|---|---|
| வருவாய் ... | 27.4 | 24.3 | 21.1 | 19.1 | 17.8 | 20.6 |
| செலவினம் ... | 44.2 | 41.1 | 45.6 | 36.6 | 38.0 | 38.2 |
| முற்பணக் கணக்குகள் உட்பட மீண்டெழும் செலவினம் ... | 28.7 | 23.9 | 24.8 | 20.8 | 19.2 | 20.5 |
| நடைமுறைக் கணக்கின் பற்றுக் குறை (—) மிகை(+) ... | - 1.3 | + 0.4 | - 3.6 | - 1.8 | - 1.4 | + 0.1 |
| மூலதனச் செலவினம் ... | 15.5 | 17.2 | 20.8 | 15.7 | 18.6 | 17.7 |
| மொத்த வரவு செலவுத் திட்டக்குறை ... | 16.8 | 16.8 | 24.5 | 17.5 | 20.0 | 17.6 |
| நிதியிடல் | | | | | | |
| வெளிநாட்டு ... | 10.4 | 8.1 | 10.1 | 9.7 | 8.8 | 8.9 |
| உள் நாட்டு வங்கியல்லா ... | 5.8 | 7.4 | 3.7 | 3.3 | 7.5 | 8.3 |
| உள்நாட்டு வங்கி ... | 0.4 | 1.3 | 10.7 | 4.6 | 4.0 | 1.0 |
| காசு நிலுவைப் பயன்பாடு ... | 0.1 | - 0.1 | - 0.1 | - ... | - 0.3 | - 0.6 |

*தற்காலிகமானவை

மூலங்கள்: திறைசேரி,
இலங்கை மத்திய வங்கி.

மேலதிக வருவாயை பரந்த அளவில் உள்ளடக்குவதன் மூலமாகவும். இறக்குமதி செய்யப்பட்டதும், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டதுமான பொருட்களின் மீதான அதிகரித்த வீதங்களின் ஊடாகவும் ஒன்று சேர்க்கும் முக்கியமான முயற்சியில் பண்ட விலைகளில் காணப்பட்ட மாற்றமடையும் தன்மையும் அதிக ஆற்றலுடைய சேகரிப்பு முயற்சிகளும் 1982 ஐவிட (9 சதவீதம்) 1983இல் மிக விரைவாக (34 சதவீதம்) வரி வருவாய்களை அதிகரிக்கச் செய்தன. இவ்வரி

[Sinhala library stamp, partly illegible]



முயற்சி அரசுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 17 சதவீதத்தை ஏற்படுத்தியது. 1982இற்கான ஒப்பிடத்தக்க விகிதம் 15 சதவீதமாகக் காணப்பட்டது. மத்திய வங்கியிலிருந்தான இலாப மாற்றல்களை ஒன்றுக்கிப் பார்க்கையில் மொத்த வருவாயில் காணப்பட்ட 42 சதவீதமான அதிகரிப்பு மொத்தச் செலவில் 1983இல் காணப்பட்ட 23 சதவீத அதிகரிப்பைவிட மிகவும் அதிகமாக இருந்தது.

மூலவளக் கிடைப்பனவு காரணமாக அரச செலவினத்தின் கட்டுப்படுத்த இயலாத மட்டம் தொடர்ந்தமை மீண்டெழும் செலவில் ஏற்படும் அதிகரிப்பை 1982இன் 26 சதவீதத்திலிருந்து 1983இல் 19 சதவீதமாக கட்டுப்படுத்த உதவியது. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் குறைந்த செயலாற்றம் காணப்படா திருந்திருப்பின், அதன் மூல இலக்கு (எதிர்பார்க்கப்பட்ட தேறிய வெளிக் கொடுப்பனவு காணப்பட்டபோதும்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.7 சதவீதத்துக்குச் சமமான ரூ. 7,270 இலட்சங்கொண்ட நடைமுறைக் கணக்கு மிகையினை ஏற்படுத்தியிருக்கும்.

செயற்பட்டுவரும் செயற்றிட்டங்களின் மீது கவனத்தைச் செலுத்தும் கொள்கையின் தொடர்ச்சியும், புதிய செயற்றிட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படாமையும், மூலதன வரவு செலவுத் திட்டத்தின் பெயரளவிலான வளர்ச்சியை 1982இன் 40 சதவீதத்திலிருந்து 1983இல் 16 சதவீதமாகக் குறைத்தன. உண்மை நியதிகளில் 1970 விலைகளினால் சுருக்கப்பட்ட மூலதனச் செலவு 1982ஐவிட எட்டுச் சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இக்குறைப்பு உண்மை நியதிகளில் பொருளாதார நடவடிக்கையின் மீது பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

பெருமளவில் அதிகரித்த வருவாயை ஏற்படுத்துவதும், செலவின் வளர்ச்சியில் குறைவை ஏற்படுத்துவதுமான சீராக்க முயற்சியின் விளைவாக, சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்காக மொத்த வரவுசெலவுத் திட்டக்குறை முன்னைய ஆண்டின் 20 சதவீதத்திலிருந்து 17.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 1982இன் போக்குகளுக்கு எதிராக நோக்குகையில் உள்நாட்டு வங்கியல்லாக் கடன்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டவற்றைவிட வெளிநாட்டு நிதியைத் திரட்டுதலும், பங்கீட்டினை அதிகரித்தலும் மொத்த வரவுசெலவுத் திட்டக்குறையினை நிதியீட்டுவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. மொத்த நிதியீட்டத்தில் வெளிநாட்டு நிதியீட்டத்தின் பங்கு 1982இற்கும் 1983இற்கும் இடையில் 44 சதவீதத்திலிருந்து 51 சதவீதத்திற்கு அதிகரித்தது.

உலகப் பொருளாதார அபிவிருத்திகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்த பயனற்ற விளைவுகளின் பின்னர் 1983இல் இலங்கையின் சென்மதிநிலுவைக்கு மிதமான ஆதரவை வழங்கின. யுத்தத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் உலகம் முழுவதும் நீடித்த பின்னடைவின் பின்பு ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட உறுதியான மீட்பு உலகப் பொருளாதாரத்தை வழிநடத்தியமையின் காரணமாக 1983இல் ஏற்பட்ட பின்னடைவிலிருந்தும் இறுதியாக வெளியேறக்கூடியதாக இருந்தது. பணவீக்கம், கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டாலும் பரந்தளவில் இருந்த உயர்ந்த தொழிலின்மை வீதங்கள் மேலும் பாதுகாப்பினை நாடிநின்றன. கைத்தொழில் நாடுகளில் ஏற்பட்ட

41770

மீட்சி நிலை உலகின் ஏனைய நாடுகளுக்கு பரம்புவதைத் தடைசெய்யும் முக்கிய காரணி இதுவாகும். கைத்தொழில் நாடுகளில் காணப்பட்ட மீட்சி, அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வியுடனும், பண்ட விலைகளின் உயர்வில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவுகளுடனும் இணைந்திருந்தன. எண்ணெய் உற்பத்தி செய்யாத அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது வர்த்தக மாற்றுவிகிதத்தில் நேர் மாற்றமடையும் நிலையைக் கொண்டிருந்தன.

பெயரளவு நியதிகளிலும், உண்மை நியதிகளிலும் வீழ்ச்சியடைந்து செல்லும் எண்ணெய் விலைகளினாலும் இலங்கையின் முதன்மைப் பண்டங்களுக்கான ஏற்றுமதி விலைகளின் கணிசமான உயர்வினாலும் வர்த்தக மாற்றுவிகிதம் 16 சதவீதத்தால் உயர்ந்து காணப்பட்டது. இம்முன்னேற்றத்தின் குறிப்பிடத்தக்க தன்மை நாட்டின் வர்த்தக மாற்றுவிகிதத்தில் 1977இலிருந்து ஏற்பட்ட மோசமான போக்கேயாகும். சாதகமான வர்த்தக மாற்றுவிகிதத் தாக்கத்தின் விளைவாக இலங்கையின் உண்மைத் தேசிய வருமானம் 1983இல் முன்னைய ஆண்டைவிட 5.7 சதவீதத்தால் அதிகரித்தது.

சிஎஉ நியதிகளில் அளவிடப்படுகையில் தேயிலையின் ஏற்றுமதி விலைகள் 38 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் இறப்பர் தெங்கு உற்பத்திகள் சராசரியாக 18 சதவீதமான விலையதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. சிஎஉ.வில் பெறுமதியிடப்பட்ட மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 7.5 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தன. எனினும், உயர் ஏற்றுமதி விலைகளும் இதன்விளைவாக சென்மதிநிலுவைப் பிரிவின் மீது ஏற்பட்ட தளர்ச்சியும், மிகவும் சாதகமற்ற சில அடிப்படைப் போக்குகளைக் கொண்டிருந்தன. தேயிலை, இறப்பர், பல சிறு வேளாண்மை உற்பத்திகள், கைத்தொழில் உற்பத்திகள் ஆகியவற்றின் ஏற்றுமதி அளவு வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 1956இலிருந்தான ஏற்றுமதிகளுள் மிகவும் குறைவானதாகக் காணப்பட்டது. முன்னெப்போதுமில்லாத வரட்சி நிச்சயமாக வெளியீட்டை மிகவும் குறைத்தவேளையில் அரச பெருந்தோட்டத் துறையின் முகாமையில் காணப்பட்ட குறைபாடுகள் தேயிலை, இறப்பர்க் கைத்தொழில்களைத் தொடர்ந்தும் பாதித்தன. 1983இல் மிகக் குறைவான முன்னேற்றமே காணப்பட்டதுடன், பிரச்சனைகளைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் உறுதியான பலனைக் கொடுத்தன. எனினும் இலங்கை உயர் ஏற்றுமதி விலைகளினால், குறிப்பாக தேயிலைக்கான விலைகளினால் பெறப்படும் முழு நன்மையையும் உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சி காரணமாக அடைய முடியவில்லை.

அண்மைய ஆண்டுகளில் உறுதியாக வளர்ச்சியடைந்த இறக்குமதிச்செலவுகள் 1983இல் உண்மையில் வீழ்ச்சியடைந்தபோதும் சிஎஉ நியதிகளில் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன (1 சதவீதம்). இவ்வாறிருந்தபோதிலும் அடிப்படையாயிருந்த காரணிகள் சென்மதிநிலுவைக்குச் சாதகமாயிருக்கவில்லை. எண்ணெய்க் கப்பல்கள், வானூர்திகள் என்பவை தவிர்ந்த இறக்குமதிகள் தமது உறுதியான அதிகரிப்பைப் பேணின. இறக்குமதி வளர்ச்சியை ஏற்படுத்தியதாக இறக்குமதிகளின் எந்தத் தனிப்பிரிவும் குறிப்பிடப்பட முடியாததுடன், பரந்த அளவிலான

உற்பத்திகளில் ஏற்பட்ட சிறு அதிகரிப்புக்கள் ஒன்றுசேர்ந்த செலவின் உயர்ச்சிக்குக் காரணமாயிருந்தன. உதவியாகப் பெறப்பட்ட இறக்குமதிகளின் பங்கு முக்கியமாக மூலதனக்கருவிகளின் பங்கு முன்னைய ஆண்டின் மட்டமான 19 சதவீதத்திலிருந்து 1983இல் 21 சதவீதமாக அதிகரித்தது. அனைத்து ஏற்றுமதி வருவாய்களுக்கும் ஏறக்குறையச் சமமான இடைநிலைப் பொருள்கள் மூலதனப்பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதிகளின் தொடர்ச்சியான உயர்ந்த மட்டங்களுக்கு எதிராக சென்மதிநிலுவையின் எதிர்கால வாய்ப்பு, இறக்குமதிப்பதிலீட்டில் முக்கியமாக வேளாண்மை உற்பத்திகளின் பெறுகைகள் இன்றிக் காணப்பட்டதுடன் ஏற்றுமதிப் பண்டங்களின் உற்பத்தியில் காணப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கு நேர் மாறுகக் காணப்பட்டமையும் இதற்கு இணையான முக்கியத்துவமுடையதாகும்.

அட்டவணை 1.6

### சென்மதி நிலுவையின் சுருக்கம் 1981 — 1983

ரூ. ப. இலட்சங்களில் (அடைப்புக்குள் சி. எ. உ. பத்து இலட்சங்களில்)

| விடயம் | 1981(அ) | 1982(அ) | 1983(ஆ) |
|---|---|---|---|
| வணிக ஏற்றுமதிகள் ... | 20,507<br>( 903) | 21,098<br>( 918) | 24,917<br>( 988) |
| வணிக இறக்குமதிகள் ... | 36,123<br>(1,596) | 41,501<br>(1,808) | 45,221<br>( 1,796) |
| காரணியல்லாப் பணிகள் [தேறிய] ... | 1,950<br>( 85) | 1,645<br>( 72) | 1,867<br>( 75) |
| காரணிப் பணிகள் [தேறிய] ... | —1,868<br>(— 81) | —2,034<br>(— 88) | —3,164<br>(— 127) |
| தனியார் மாற்றல்கள் [தேறிய] ... | 3,918<br>( 172) | 5,494<br>( 240) | 6,400<br>( 255) |
| அலுவல்சார் மாற்றல்கள் [தேறிய] ... | 3,118<br>( 136) | 3,379<br>( 147) | 4,016<br>( 160) |
| நடைமுறைக் கணக்கு நிலுவை ... | —8,498<br>(—381) | —11,919<br>(— 519) | —11,185<br>(— 445) |
| மொத்த நிலுவை ... | — 406<br>(— 26) | —1,149<br>(— 24) | + 296<br>( 0.5) |

#### சில முக்கிய குறிகாட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| வர்த்தக மாற்று வீதம் (1978 = 100) ... | 46 | 38 | 44 |
| தேறிய பெற்றோலிய இறக்குமதிகள் ... | 6,592<br>( 291) | 8,994<br>( 391) | 8,342<br>( 331) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குக் குறை ... | 10 | 12 | 9 |
| மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் ... | 9,222<br>( 387) | 11,094<br>( 472) | 12,840<br>( 491) |
| மொத்த பன்னாட்டு ஒதுக்குகளின் இறக்குமதிகள் இயலளவு (மாதாந்த இறக்குமதிகள்) (இ) ... | 2.6 | 3.2 | 3.1 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை

(இ) சிஎஉ நியதிகளில் தொடர்ந்து வரும் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட இறக்குமதிகள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

ஏற்றுமதி விலைகளிலேற்பட்ட பெருமளவான அதிகரிப்புக்கு நன்றி செலுத்தினாலும், சென்மதி நிலுவையின் வணிகக் கணக்கிலேற்பட்ட பற்றுக்குறை 1983இல் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பணிகள் கணக்கில் காணப்பட்ட பற்றுக்குறை 1982இலும் பார்க்க மேலும் விரிவுபடுத்தப்பட்டமைக்கு சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வெளிநிற்கும் கடன்பாடுகள் மீதான வெளிநாட்டு வட்டிக்கொடுப்பனவுகளிலேற்பட்ட பெருமளவான அதிகரிப்புமே காரணங்களாகும். யூலைக் கலவரங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட உறுதியற்ற நிலைகள் சுற்றுலாத்துணைத்துறையின் நடவடிக்கைகளை மிகவும் பாதகமாகப் பாதித்தன.

உதவியாகப் பெறப்படும் அலுவல்சார் கொடை வரவும், வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களின் பண அனுப்பல்களும், சென்மதிநிலுவையில் ஏற்பட்ட நடைமுறை கணக்குக்குறையினை மிதமாக்குவதில் கணிசமானளவிற்கு உதவின. எனினும் இப்பாய்ச்சல்களின் வேகம் முக்கியமாக தொழிலாளர் பண அனுப்பீடுகள் 1983இல் மிகவும் குறைவானவையாகக் காணப்பட்டன. முக்கியமாக முன்னேற்றமடைந்த வர்த்தகநிலுவையின் காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறையும் 1982இல் பதிவுசெய்யப்பட்ட மட்டத்தைவிட (சிஎஉ 5,190 இலட்சம்) 1983இல் (சிஎஉ 4,150 இலட்சம்) குறைவாகக் காணப்பட்டது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக்கணக்குப் பற்றுக்குறை 1982இன் 12 சதவீதத்திலிருந்து 1983இல் ஒன்பது சதவீதமாகக் காணப்பட்டது இவ்விகிதம் ரூ. 40,160 இலட்சங்கொண்ட (சிஎஉ 1,600 இலட்சம்) அலுவல்சார் மாற்றல்களைத் தவிர்த்து முன்னைய ஆண்டின் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1983இல் 13 சதவீதமாகக் காணப்பட்டது.*

1982ஐப் போன்று பெருமளவான நடைமுறைக்கணக்குப் பற்றுக்குறை காணப்பட்டபோதிலும் 1983இன் சென்மதிநிலுவையில் காணப்பட்ட மொத்தப் பற்றுக்குறை, நேரடி முதலீடு, நீண்டதவணை வெளிநாட்டுக் கடன்கள் ஆகியவற்றின் வடிவிலான நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சலின் காரணமாக குறைந்த மட்டத்திலேயே பேணப்பட்டது. 1983இல் நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல் ரூ. 107,970 இலட்சமாக (சிஎஉ 4,280 இலட்சம்) விளங்கியவேளையில் 1982இல் தேறிய உட்பாய்ச்சல் ரூ. 108,130 இலட்சமாக (சிஎஉ 4,710 இலட்சம்) விளங்கியது.

1983இல் நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல் சிஎஉ நியதிகளில் 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு தனியார் வெளிநாட்டு நேரடி முதலீட்டிலேற்பட்ட வீழ்ச்சியே முழுக்காரணமாயிருப்பதுடன், அரசதுறைக்கான நாணயமல்லா மூலதனத்தின் உட்பாய்ச்சல் 26.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 1983இல் நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல் பெரும்பாலும் நடைமுறைக் கணக்குக்குறையின் முழுத்தொகையையும் நிதியீட்

---

* இவ்விகிதத்தைக் கணக்கிடுகையில், கொடைகளின் நன்மைகள் காணப்படாத நிலையிலும் இறக்குமதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும்.

டக்கூடியதாயிருந்தது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1983இல் ஐந்து சதவீதத்தால் அதிகரித்து, ரூ. 128,400 இலட்சமாக (சிஎஉ 4,910 இலட்சம்) விளங்கியது. இது 1984இற்காகத் திரட்டப்பட்ட 3 மாத இறக்குமதிகளை நிதியீட்டப் போதியதாயிருந்தது.

முன்னைய ஆண்டறிக்கைகளில் அதிமுக்கிய விடயமாக தொடர்ந்து காணப்பட்ட சென்மதிநிலுவையின் நடைமுறைக்கணக்கின் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் பெரும் பற்றுக்குறையின் விளைவாக வளர்ந்துவரும் வெளிநாட்டுப் படுகடனின் மட்டம் விளங்கியது. அதிகரிக்கும் வெளிநாட்டுப் பொறுப்புக்கள், குறிப்பாக குறுகிய காலத்தில் முதிர்ச்சியடைபவை சென்மதிநிலுவை முகாமைத்துவத்துக்கு கடுமையான முறையில் பாதிப்பினை ஏற்படுத்துவதோடு செலாவணி விகிதத்தையும் பாதிக்கின்றது. சென்மதி நிலுவைகளின் மூகாமைத்துவம் வலுவற்றுப் போகும்போது இலங்கையினது தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகமும் கொடுப்பனவுகள் முறையும் தங்கியுள்ள அத்திவாரமே ஆட்டம் காணக்கூடும் எனவே வதிவல்லாதோரோடு உள்நாட்டு முயற்சியாளர்கட்கும் வர்த்தகம்செய்ய வசதியளித்ததோடு நிற்காது, வதிவல்லாதோருக்கு வழங்கப்பட்ட கடன்பாடுகள் சென்மதிநிலுவையினைப் பாதிக்காத வகையில் நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் நடாத்தப்படுவதை நடைமுறைப்படுத்த மேலதிக கவனம் செலுத்தப்படல் அவசியமாகும்.

கடந்த ஆண்டுகளில் படுகடன் விகிதம் சிலவகைப் படுகடன்களைத் தவிர்த்து வந்தமைக்கு கடல்கடந்த பிரிவுகள் மூலம் ஏற்படும் மதிப்பீட்டு இடர்ப்பாடுகளே முக்கிய காரணமாக இருந்தன. இத்தவிர்ப்புக்கள் வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகளால் கொ பெ.பொ.ஆ. முயற்சிகளுக்கும் சில அரச கூட்டுத்தாபனங்களுக்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் வெளிநாட்டில் வழங்கிய கடன்பாடுகள் தொடர்பானவையாகும். கொடுகடனுக்கு உள்நாட்டுச்சந்தையில் காணப்பட்ட பொதுவான கட்டுப்பாடும் உயர்ந்த செலவும், வெளிநாட்டில் கடன்படத் தூண்டியதோடு, இலங்கையினதைவிட, முக்கிய பணச்சந்தைகளில் வட்டி விகிதம் குறைவாக இருந்தமையும் இதற்குக் காரணமாக அமைந்தது. 1979ஆம் ஆண்டில் மொத்த வெளிநாட்டுப்படுகடனில் மிகச் சிறிதளவாகக் காணப்பட்ட வங்கிக்கடன்பாடுகளும் வர்த்தகக் கொடுகடனும் 1983ஆம் ஆண்டில் 33 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. இவ்விரண்டு ஆண்டு காலப்பகுதியில் நீண்ட கால சலுகை அடிப்படையிலான படுகடன் சிஎஉ 10,510 இலட்சத்தால் அதிகரித்தவேளையில் வர்த்தக மூலத்திலிருந்தான உயர்ந்த செலவைக்கொண்ட குறுகிய கால முதிர்ச்சிக் கொடுகடன்கள் சிஎஉ 5770 இலட்சங்களால் அதிகரித்தன. இதன்விளைவாக படுகடனைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்களவு சீர்கேடு காணப்பட்டது. இன்னுமொரு கவலைதரும் அம்சமாக விளங்கியது யாதெனில் 1983ஆம் ஆண்டில் ஏற்றுமதி விகிதத்திற்கெதிரான படுகடன் பணிகள் 22 சதவீதமளவுக்கு அதிகரித்தமையேயாகும். தொழிலாளர்களின். பண அனுப்பல்கள் ஏற்றுமதிகளுடன் சேர்க்கப்பட்டால் இவ்விகிதம் 18 சதவீதமாக வீழ்ச்சியடையும். மறுபுறத்தில் வர்த்தக மாற்றுவிகித இலாபங்களையும் தவிர்த்தால், படு

கடன் விகிதம் தொழிலாளர் பண அனுப்பல்கள் ஏற்றுமதி வருவாய்களோடு* கூட்டப்படுகின்றதோ இல்லையோ என்பதற்கேற்ப 24.4 சதவீதம் அல்லது 19.8 சத வீதமாக விளங்கும்.

ஆய்வுக்குரிய ஆண்டு கடுமையான வலு நெருக்கடிக்கும் குறிப்பிடத்தக்க ஆண்டாகும். உலகில் வலு நுகர்ச்சி வீழ்ச்சிப்போக்கில் காணப்பட்டபோதும் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகள் வலு நுகர்வில் உறுதியான அதிகரிப்பை ஏற்படுத்தின. அதன்விளைவாக எண்ணெய் விலைகளில் உண்மை, பெயரளவு நியதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி வரவேற்கத்தக்கதோர் நிவாரணமாக அமைந்தது. எனினும் விலை வீழ்ச்சியின் நலனை இலங்கை முற்றாகப் பெறமுடியவில்லை. ஏனெனில் நீர் மின்வலு உருவாக்கம் வரட்சி நிலைமைகளால் கட்டுப்படுத்தப் பட்டமையாகும். எனவே தொடர்ந்தும் வழங்கல்களைப் பேணுவதற்கு இறக்கு மதி செய்யப்பட்ட பாரதீசலைப் பாவித்து உயர்ந்த செலவிலான வெப்ப மின்வலு உருவாக்கப்பட்டது. இது மொத்த இறக்குமதிச்செலவில் இன்னும் இரண்டு சதவீதத்தை அதிகமாக்கியது.

மட்டுப்படுத்தப்பட்ட மூலங்களை சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதற்குப் பெருமளவில் கட்டுப்பாடற்ற சந்தைச் சக்திகளில் தங்கியிருக்கும் முக்கிய சீர் திருத்த நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு ஆறு வருடங்கள் ஆகின்றன. முதன் மைப்பயிர் உற்பத்தி (நெல்) சில துணைப்பயிர்கள், தொழில்வாய்ப்பு நிலை என்பவற்றில் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அவதானிக்கக்கூடியதாக இருக்கு மிடத்து பொருளாதாரத்தின் அமைப்பிலும் அதன் முகாமைத்துவத்திலும் ஆழப் பதிந்த குறைபாடுகள் தொடர்ந்தும் காணப்பட்டன. இத்திறந்த பொருளாதா ரத்தின் சென்மதிநிலுவை வேளாண்மையைப் பொறுத்தவரை இறக்குமதிக்குறைப் பினால் நன்மைகளைப் பெற்றபொழுதிலும் 1983 இலும் பலமற்றதாகவே தொடர்ந்தும் காணப்பட்டது. ஒரு நிலையான அல்லது வீழ்ச்சியடையும் உற்பத்தி வளைகோட்டில் ஏற்றுமதி மிகைகள் மிகவும் குறைவாகவே காணப்படும். ஏற்றுமதி அமைப்பினை பன்முகப்படுத்துவதன்மூலம் பெறப்படும் இலாபங்கள் நடுத்தர சென்மதி நிலுவைக்கு முக்கியமாக இருந்தபோதும் சிறு வேளாண்மைப் பயிர் களைப் பொறுத்தவரை நிலைமை தெளிவற்றதாயும் கைத்தொழில் பயிர்களைப் பொறுத்தவரை நிலைமை உறுதியற்றதாயும் காணப்படுகின்றது. 1983ஆம் ஆண்டின் வர்த்தகமாற்றுவிகிதம் இலங்கைக்குச் சார்பாக காணப்பட்டமையும் 1984ஆம் ஆண்டிலும் இந்நிலை தொடரலாம் என்ற நம்பிக்கையும், இலக்குகளை அடையும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அவசியத்தையும் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மையையும் குறைக்கக்கூடாது.

இலங்கை அதன் அரிசி உற்பத்தியில் சுயதேவையைப் பூர்த்திசெய்யும் நிலை யில் உள்ளது. உற்பத்தியில் கிடைத்த குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, அதிகளவு நிலப்பரப்பினை அறுவடை செய்ததைவிட, ஏக்கருக்கான அதிக விளைச்சலின்

---

* கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளுக்கான அனைத்து வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளினதும் கடன் வழங்கல்கள் இனங்காணப்படாத தால் படுகடன் பணி விகிதமும் இங்கு இன்னமும் ஓரளவு குறைத்துக் கூறப்பட்டுள்ளது என்றே கருதப்படுகின்றது.

விளைவேயாகும். விரைவு படுத்தப்பட்ட மகாவலிச் செயற்றிட்டத்தினது கீழ் நீரோட்டப்பகுதிகள் தொடர்பாக தொழிற்பாடுகள் வேகமடையும் வேளையில் குறிப்பிடத்தக்களவு நீர்ப்பாய்ச்சல் நிலங்கள் கிடைக்கத்தக்கனவாக இருப்பதும் காலநிலைகள் குறைந்த அளவிலான நிலப்பரப்பினையே பாதித்தமையும் மேலும் பெருமளவு உற்பத்தி இலாபங்கள் கிடைக்கக்கூடிய தன்மையைக் காட்டுகின்றது. இவற்றை சென்மதி நிலுவைக்குச் சாதகமான காரணிகளாக மாற்றிக்கொள்ளு தல் உள்நாட்டில் உற்பத்தியாகும் அரிசியினை, விலையுயர்ந்த இறக்குமதி செய்யப் படும் கோதுமை மாவிற்குப் பதிலீடாக எந்த அளவுக்கு பயன்படுத்தலாம் என்ற ஆய்வினில் தங்கியிருக்கிறது. 1983ஆம் ஆண்டில் மொத்த இறக்குமதியில் 5 சதவீதம் கோதுமைத்தானிய இறக்குமதிக்குச் செலவிடப்பட்டது. நன்றாகப் பழகிவிட்ட உணவுப் பழக்கங்களை மாற்றுவதானால் அதற்கு அரிசிக்கும் மாவிற்கும் இடையே கணிசமானளவு விலைமாற்றம் ஏற்படுதல் வேண்டும். இது கோதுமை மாவின் இடத்திற்கு அரிசியினைப் பதிலீடாகச் செய்வதற்கு தயாரிப்பு வேலைகளில் முதலீட்டினை உருவாக்குவதற்கான ஊக்குவித்தற் காரணிகளின் அமைப்புமூலமே ஏற்படுத்தப்படல் வேண்டும். இன்னுமொரு ஒத்த நடவடிக்கையாக தற்போது விளைச்சல் குறைவாகக் காணப்படும் நெற்பயிர்ச் செய்கை நிலங்கள் துணைஉணவுப் பயிர்ச்செய்கைக்கு மாற்றப்படுதல் வேண்டும். இதேபோல உற்பத்தி மிகையினை ஏற்றுமதிச் சந்தைக்கு உகந்ததாக வழங்குவதும் முக்கியமாகும். ஏற்றுமதிச் சந் தையில் ஈடுபடுவதற்கு நீண்டகால ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளவும் அவற்றைப் பூர்த்திசெய்யவும் ஏற்ற திறமையும், கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டு முறைகளும் முன்கூட்டியே தேவையானவையாகும். உண்மையில் இவ் எல்லாத்துறைகளிலு மான முன்னேற்றங்களும் மகாவலி செயற்றிட்டத்தின் கீழ்நீரோட்டப்பகுதி முதலீடுகளின் பயன்பாட்டிலேயே தங்கியுள்ளன.

நெற் சந்தைப்படுத்தற் சபைக்கான (நெசச) குறைந்த அளவிலான தொழிற் பாடுகளுடன் அதனுடைய மேலதிக நவீன அரைத்தல் இயலளவுடன், தனது சொந்த ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுடனும் நெற்சந்தைப்படுத்தும்சபை இச்சவாலை ஏற்றுக்கொள்வதற்கு சாதகமான நிலையில் இருக்கின்றதெனலாம். கடந்தகால உள்ளூர் நெல், அரிசி கொள்வனவு விற்பனை அனுபவங்களின் மூலம் பார்க்குமிடத்து நெல் சந்தைப் படுத்தும் சபை உத்தரவாத விலைத்திட்டத்தை நிலை நிறுத்துவதைத் தவிர வேறு முயற்சிகளில் ஈடுபடுதல் விரயமான இரட்டிப்பு வேலை யாகவே இருக்கும். இணைந்த உபாயத்தின் கீழ் உணவு ஆணையாளர் அரிசித் தாங் கிருப்பொன்றினை வைத்திருக்கும் அதேவேளையில் நெற் சந்தைப்படுத்தும் சபை, ஏற்றுமதிச் சந்தையில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இதன் உடனடியானதும், நன்மைதரக் கூடியதுமான பயன்யாதெனில் 1983ஆம் ஆண்டில் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதும், நாணயக் கொள்கைகளை சிக்கன மாக்கியதும், பணவீக்கத்துக்குக் காரணமாக அமைந்ததுமான சந்தை மீள்நிதி யிடல் வசதிக்கு குறைந்த அளவில் தேவை ஏற்படுவதேயாகும்.

கவனமாக உருவாக்கப்பட்ட கொள்கையின் விளைவாக நெல் வேளாண்மையில் ஏற்பட்ட பயனும், துணை உணவுப் பயிர்களின் உற்பத்தியில் காணப்படும் ஆற்றல் குறைவும் பின்னையதுறையின் கொள்கை ஊக்குவிப்புக்களில் இன்னமும் பொருத்

மின்மை நிலவுவதைக் காட்டுகின்றன. விரிவாக்கம், சந்தைப்படுத்தல், களஞ்சியப் படுத்தல் போன்ற வசதிகள் போதியதாக இல்லாமை பருவ காலங்களில் தளம் பலுறும் விலைகள் ஆகியவற்றினுல் உற்பத்தி தொடர்ந்தும் பாதிக்கப்பட்டது. குறிப்பிட்ட சில கொள்கைகளில் உள்ள முரண்பாடுகள் மாற்றமுடியாதனவாக விளங்குகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளூர்ச்சந்தையில் நுகர்வோர், (உடன் தேங்காய், தேங்காயெண்ணெய்) விலங்குத்தீன் கைத்தொழில் (புண்ணுக்கு) ஆகியவற்றினுல் நிர்ணயிக்கப்படும் தெங்கு உற்பத்திகளின் போட்டி விலைகள் எண்ணெய் விதைகள், சோயா அவரை போன்ற பதிலீட்டுப் பொருள்களைப் பயிரிடுவதில் உற்பத்தியாளர்களை ஊக்கம் குன்றச் செய்வதைக் குறிப்பிடலாம். 1983இல் காணப்பட்ட கடுமையான வரட்சியும் அதன்விளைவாக தேங்காய்க்கு ஏற்பட்ட உயர்ந்த விலைகளும் சோயாவைக் கவர்ச்சியான பதிலீடாக மாற்றுவதற்கான தேவையை ஏற்படுத்தின. அவ்வாறிருந்துங்கூட மிகையான ஏற்றுமதிகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு காப்புறுதி உபாயமாக தெங்கு உற்பத்திகளுக்கு ஏற்றுமதி உரிமம் மீண்டும் கொண்டுவரப்பட்டது. இங்கு விவாதத்திற்குரியது தனிப்பட்டதொரு நிகழ்ச்சியல்லவெனினும் கொள்கைக் கடப்பாட்டிற்குரியதாக இருக்கவேண்டும்.

வேளாண்மைப்பன்முகப்படுத்தலுக்கான உள்ளார்ந்த வளம் பின்வரும் பிரிவுகளில் ஆராயப்படும். தேர்ச்சிமிக்க இடைப்பயிர்ச்செய்கைக்கான கொள்கைகள் சமமான முதன்மை வாய்ந்தனவாகும். சிறு உடைமையாளர் கூடுதலாகக் காணப்படும் தெங்கு நிலங்களில் இடைப்பயிர்ச் செய்கைகளிலிருந்தான வருவாய்கள் கவர்ச்சி மிக்கனவாக விளங்குகின்றன. தனிப்பயிராகத் தென்னையைப் பயிரிடுதல் அல்லது மீளப்பயிரிடுதல் கவர்ச்சி மிக்கதாகக் காணப்படவில்லை. இதனைவிட நீண்டகாலம் பயன்தரத்தக்க பயிர்கள் இடைநிலைப்பயிர்களாகப் பயிரிடப்படின் வருவாய் மிக அதிகமாக உயரும் வேளையில் தேசிய நோக்கில் துணை உணவுப்பயிர்களின் உற்பத்தி தெங்கு உற்பத்தி ஆகிய இரண்டும் பெருமளவில் வளர்ச்சியடையும்.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் முகாமையை மீளமைப்புச் செய்வதற்கான தேவையைப் பொறுத்தமட்டில் முன்னைய ஆண்டறிக்கைகள் தொடர்ந்தும் கவனத்தை ஈர்த்துள்ளன. கணக்கிடும் தன்மை, உற்பத்தி அமைப்பு, தீர்மானம் செய்யும் அதிகாரம், பொறுப்பாண்மை ஆகியன தொடர்பாக முகாமை ஆலோசனைக் குழுவினுல் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கை முற்றுப் பெற்றிருக்கிறது. இதனை நடைமுறைப்படுத்தல் மிக விரைவாக மேற்கொள்ளப்படவேண்டியதுடன் நடைமுறைப்படுத்தல்கள் தடைப்படுவதிலும் பார்க்க அதற்கு வசதியளிக்குமுகமாக தேயிலை, இறப்பர் ஆகியவற்றின் விலைகளில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு பயன்படுத்தப்படின் பயன்மிக்கதாக இருக்கும். அதேவேளையில் தேயிலை, இறப்பர் சொத்துக்களை நீண்டகால ஆற்றல் மிக்கனவாக உறுதிப்படுத்துவதற்காக உலக வங்கியின் உதவியுடனுன பெருந்தோட்ட நடுத்தரகால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் முடிவினை பெருந்தோட்டங்களின் கைத்தொழில் எதிர்பார்த்திருக்க முடியும்.

பரந்த நோக்கில் சென்மதி நிலுவையின் நீண்டகால ஆற்றல் தன்மை கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி மீதே மிக அதிகளவில் தங்கியிருந்துங்கூட

வேகத்தை விரைவுபடுத்துவதற்கான ஒருங்கிணைந்தகொள்கை நடவடிக்கைகள் குறைவாகவே காணப்பட்டன. செலாவணிவீத அபிவிருத்திகளுடன் தொடர்பான ஊக்குவிப்புக்கள் குறிப்பாக 1983இல் சரியான நோக்கில் மேற்கொள்ளப்பட்டதெனினும் இணைந்த நடவடிக்கைகள் பின்தங்கியிருந்தன. பெற்றோலியத் துணை உற்பத்திகளின் மீள ஏற்றுமதிகள் தவிர கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு அரசதுறைத் தயாரிப்பு முயற்சிகளின் பங்களிப்பு மிகக்குறைவாகவே இருக்கின்றது.

உயர்ந்த பாதுகாப்புத் தீர்வையினால் பாதுகாக்கப்பட்ட பாதுகாப்புச்சந்தையிலிருந்தான செயற்பாடுகளினதும், இறக்குமதிசெய்யப்பட்ட பதிலீடுகளுடனான போட்டியை எதிர்நோக்கும் சந்தைத் தீர்வைத் தடைகளெதுவுமின்றி இருக்கின்றதினதும் காரணமாக ஏற்றுமதிச்சந்தை மீள் சீராக்க செயற்பாட்டில் இடர்பாடு மிக்க தெரிவுகளை மேற்கொள்ளவேண்டிய சிக்கலான சூழ்நிலையில் இருக்கின்றது. செலாவணிவீதம், வரிச்சலுகைகள், ஏற்றுமதி நன்கொடைகள் போன்ற பரந்தளவு ஊக்குவிப்புக்களுடன் இன்றியமையாத ஒழுங்கமைந்த கைத்தொழில் திறமையின்மையிலிருந்தும் திறமையை இனங்கண்டு கொள்ளும்பொருட்டு தீர்வைச் சீரமைப்பின் மீது தங்கியிருக்கிறது. குடியரசுத்தலைவரின் தீர்வை ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்கள் 1984ஆம் ஆண்டுக்காலத்தில் கிடைக்கச் செய்யப்படவேண்டும். எங்கு கூட்டப்பட்ட பெறுமதி மிகக் கூடுதலாக இருக்கின்றதோ அப்பிரிவுகளுக்கு மிகப்பாதகமாக இருக்கக்கூடியதும் உதவி வழங்கப்படாத உள்ளீடுகளின் மீது உதவுதொகைகளையும், வரையறுக்கப்பட்ட இறக்குமதிப்போட்டிக்கான உரிமமுறைகளைக்கொண்டதுமான உதவி வழங்கப்படாத பிரிவுகளுக்கு எதிர்மாறாக அமையக்கூடியதுமான தீர்வை அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு இவ்விதந்துரைப்புக்கள் இன்றியமையாதனவாகக் கருதப்படலாம். அரசதுறையின் சமூக நோக்கங்களைக்கொண்ட சில குறிப்பிட்ட விடயங்களைப் பொறுத்தவரையில் இது மீள் சீராக்க செலவினைப் புறக்கணிப்பதற்கு பயனற்றதாக இருக்கக்கூடும். எதிர்காலத்தில் தொழிற்பாட்டுச் செலவுகளைக்கூடப் பெறமுடியாத தொழில் முயற்சிகளை மூடிவிடும் விருப்பத்தை புறக்கணிக்கக்கூடாது. 1983இல் அவதானிக்கப்பட்ட இது தொடர்பான அரசின் தீர்மானம் வரவேற்கத்தக்க அறிகுறியாக இருக்கிறது.

எனினும் குறிப்பிட்ட சில துறைகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் அவற்றின் நோக்கங்களை முழுமையாக அடைவதற்காக நுண் பொருளியல் அமைப்பில் தங்கியிருந்தன. பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி அரச முயற்சிகள் ஆகியவற்றிற்கிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்கு இறைக் கொள்கைகள், பொது நிதியங்கள் ஆகியன உறுதியான நிலையில் வைத்திருக்கப்படவேண்டியது தவிர்க்க முடியாததாகும். சேமிப்பிற்கும் முதலீட்டிற்குமிடையிலான மிகப்பெரும் சமமற்ற தன்மையைக் கவனிக்கையில் சிறந்த முகாமைக்கான முன்னேற்பாடு என்பது நடைமுறைக் கணக்கு மிகை ஊடாக உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கு உதவுவதற்காக அரசு இயலத்தக்கதாக இருப்பதாகும்.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

உண்மையில் 1983இல் இது சிறிய அளவிலேனும் அடையப்பட்டது. ஆனால் இது தற்போதிருக்கும் மூலங்களிலிருந்தான முக்கிய வரி விதிப்புக்களினால் ஓரளவும்,

சில ஏற்றுமதிப் பண்டங்களுக்கான உயர்ந்த விலைகள் தொடர்பாக எதிர்பாராமல் பெறப்பட்ட நன்மைகளினுல் ஓரளவும் பெறப்பட்டது. வரவு செலவுத்திட்ட வலியுறுத்தல்களின் அடிப்படைப் பலவீனத்தில் காணப்படும் பெரும் இயக்க சமநிலையற்ற தன்மைக்கான ஆற்றல் பண்ட அடிப்படையிலான பொருளாதாரத்தில் புனருத்தாரண வரிப் பெறுகைகளுக்கு அவசரமாகத் தேவைப்படுகின்றது. மீண்டெழும் செலவினத்தில் மீண்டும் பழைய நிலையை அடைவதற்கான சாத்தியங்கள் மெதுவாகவே இருக்கின்றன. பொதுப்படுகடன் மீதான வட்டியும் தேசிய சேமிப்பு வங்கிக்கான உதவு தொகையும் 1983ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவினத்தில் 32 சதவீதத்தை ஈர்த்துக்கொண்டன. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வங்கித்தொழில் முறைகளை நாடுவதனை வரவு செலவுத் திட்ட முகாமை தவிர்த்துக் கொள்ளுதல் வட்டிக் கொடுப்பனவுகளுக்கான குறைக்கப்பட்ட பொறுப்பினூடாக மீண்டெழும் செலவினத்தின் விரிவைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் உயர்ந்த மட்ட முதலீடுகளின் கீழான பெரும் செயற்றிட்டங்கள் முற்றுப் பெற்றுத் தொழிற்படத் தொடங்கியிருப்பதனுல் பேணல் செலவுகளின் காரணமாக மீண்டெழும் செலவினத்தில் கூடுதலான செலவுகள் ஏற்படுவதனைத் தவிர்க்க முடியாமல் இருப்பதும் மேலும் கவனத்திற்குரிய ஒன்றுகும்.

இந்நிலையில் உள்ளார்ந்த அமைப்புச் செயற்றிட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பெருமளவு முதலீடுகளின் நேரடி இலாபங்களின் மூலம் அரசிறைக்கான உதவு தொகை சேரவேண்டும். அரசதுறைத் தொழில் முயற்சிகள் தமது பங்கிலாபங்களை அரசிற்கு வெளிப்படுத்துவதைக் கட்டாயப்படுத்த வேண்டும் என்பதனை உறுதிப்படுத்துவது இணையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் அவற்றின் பங்குகளிலும் கடன் சொத்துக்களிலும் அரசிற்கான வருவாய் பங்கும் இருப்பதேயாகும். திறமைத்தன்மை அடிப்படையின் மீது அரச முயற்சிகளை மீள ஒழுங்கமைப்பது ஒன்றே இலாப முறையில் அவற்றை இயங்கச் செய்வதற்கான ஒரே வழியாகும். இந்நோக்கில் தொழிற்படத் தொடங்குவதற்கு தற்போது இருக்கின்ற வரையறுக்கப்பட்ட சாத்தியக்கூறுகள் கூட பணப்பாய்ச்சல் குறைவினுல் அவற்றின் ஆற்றலில் குறைவு ஏற்பட்டதன் காரணமாக நிதியிடல் ஆற்றல் படைத்த முயற்சிகள் பல அவற்றின் பொறுப்புக்களின் அளவினைமீறி அவற்றின் முயற்சிகளுடன் தொடர்புபடாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதனுலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட கட்டுப்பாடுகளுக்கிணங்க, பொருளாதாரத்திற்கு இன்றியமையாததென இனங் காணப்பட்ட சில வரையறுக்கப்பட்ட விடயங்களைத் தவிர, நடுத்தரகால அரச முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் புதிய செயற்றிட்டங்களை அனுமதிப்பதில்லையென்ற கொள்கையைத் தொடர்வதற்கு ஏதுவாக இருந்தது. இது தொடர்பாக ஒரு செயற்றிட்டத்திற்கு சலுகை அடிப்படையிலான உதவி கிடைக்கத்தக்கதாக நன்கொடையாளரால் முழுமையாக நிதியிடப்படுவதாக இருந்தாலுங்கூட அது இரண்டாவது பொருத்தக் காரணியாகவே இருக்கும். முதல் நிபந்தனையாக இருப்பது யாதெனில் தேசிய அளவிலான முன்னுரிமைகளை தீர்மானிப்பதேயாகும். அவ் அளவுகள் விரைவாகப் பயன்படுகின்ற, நியாயமான நிதியிடலுடன் பொருளாதார இலாபங்களை தருகின்ற ஏற்று

மதி விரிவாக்கல் அல்லது இறக்குமதி பதிலீடு ஊடாக சென்மதி நிலுவையைப் பலப்படுத்துகின்ற புதிய செயற்றிட்டங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொதுப்படுகடன் மீதான உயர்ந்த சுமையைக் கருத்திற்கொண்டு மூலதன முதலீடுகளைக் கட்டுப்படுத்துகின்றதொரு கொள்கை ஏனைய முதலீட்டுத்துறைகளை எதிர்பார்க்கும் தேசிய சேமிப்பு வங்கிபோன்ற நிதியின் "நிலையான மூலங்களுடன்" தொடர்பானவையாக இருக்கக்கூடும். மூலதனச் சந்தையின் அபிவிருத்தி முதலீடுகளுக்கான ஏனைய வழிவகைகள் ஆகியவைமீது அரசு தனது மனப்போக்கினை தெளிவாகச் செலுத்தவேண்டும்.

1983ஆம் ஆண்டின் பாடங்கள் 1984ஆம் ஆண்டின் நாணயக் கொள்கையின் முகாமைக்கும் நடத்தைக்கும் நன்மை பயப்பதாக இருக்கவேண்டும். நாணயக் கொள்கை தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட வேண்டியிருப்பினும் வட்டி வீதங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு நெகிழ்ச்சித்தன்மை பேணப்பட்டது. சலுகை அடிப்படையிலான நிதிக்கான ஏற்றுமதித்துறையின் கேள்விகள் முன்னுரிமைத் துறைகளுக்கான அதிகரித்த மீள் நிதியிடல் எல்லைகளின் மூலம் ஈடுசெய்யப்பட்டன. எனினும் தனியார்துறைக்கான கொடுகடனின் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டதனுல் இறுதிக்காலாண்டில் நாணயக்கொள்கை வழிமுறைகள் மேலும் இறுக்கமாக்கப்படவேண்டியிருந்தது. பண்டத்தில் ஏற்பட்ட பெருக்கம் வங்கித்தொழில் முறையின் திரவத் தன்மையை மேலும் முன்னேற்ற வேண்டும். அத்தகைய மூலவளங்களின் பயன்பாடு வளர்ச்சி அபிவிருத்தி வருவாய் ஆகியவற்றை மேலும் உயர்த்துவதற்கு தரம் வாய்ந்த கொடுகடன் கட்டுப்பாட்டுக் கொள்கைகள், தாக்கம் மிக்க வழிப்படுத்தல், பொறிமுறை அமைப்பு ஆகியன இணைந்திருப்பதை உறுதிப்படுத்தல்வேண்டும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற நோக்கம் உயர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் வெளிநாட்டிற்கு வெளிச் செல்வதனை (இறக்குமதிகள்) கட்டுப்படுத்துவதன் மூலம் சென்மதி நிலுவையைப் பாதுகாத்தல் ஆகியன நாணயக் கொள்கை வழிமுறைகளின் ஒழுங்கான மீளாய்விற்கான தொடர்ச்சியான தேவையை எடுத்துக் காட்டுகின்றவேளையில் நெகிழ்ச்சித் தன்மைவாய்ந்த அணுகுமுறையையும் உறுதிப்படுத்துகின்றன. வதியும் முயற்சியாளர்களினல் வெளிநாட்டு வங்கிகளிலிருந்து பெறப்படும் கடன்பாடுகள் தொடர்பான கொள்கை பற்றிய ஒரு முழுமையான மீள் மதிப்பீட்டுடன் நெற் கொள்வனவில் நெற் சந்தைப்படுத்தும் சபையின் பங்கு குறைக்கப்பட்டதற்கு ஏற்ப நெற் சந்தைப்படுத்தல் மீள் நிதியிடல் கடனைக் கட்டுப்படுத்தல் ஆகியன முக்கியமாக குறிப்பிடத்தக்க பண்புகளாகும்.

அதிகரிக்கின்ற உற்பத்தியை நோக்கமாகக் கொண்ட துறைவகைப்படியான கொள்கை உயர்ந்த ஏற்றுமதிகள், இறக்குமதிகளில் நம்பியிருத்தலைக் குறைத்தல் ஆகியவற்றினூடாக சென்மதி நிலுவையை உறுதிப்படுத்தமுடியும். நாணய இறைக் கொள்கைகள் உற்பத்திக்கு வசதியளித்தல் இதன் விளைவாக சென்மதி நிலுவைக்கான நன்மைகளை உறுதிப்படுத்தல் ஆகியவற்றிற்கான இன்றியமையாத நுண்பொருளியல் பின்னணியை வழங்குகின்றன. விலை உறுதிப்பாட்டிற்கு பயமுறுத்தலாக இருக்கக் கூடிய தவறுகளை அனுமதிக்க முடியாதாகையால் தொடர்ச்சியான சீராக்கங்களை மேற்கொள்வது இன்றியமையாத ஒன்ருக இருக்கின்றது.

---

தொடர்ந்து வரும் பிரிவுகள் 1983ஆம் ஆண்டின் அபிவிருத்திகளை கூடியளவிற்கு விபரமாக பகுத்து ஆராய்கின்றன.